190375

July 1925

190379

சித்திரமணி

உ 12

1926
ஜூ, ~~1925~~

JL
Y15m2,N24
N26,1-12
190379

289

REG. NO. M. 1957. 1925. VOL. I. NO. 12.

# சிந்தாமணி

ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்

ஸகோதரி. வி. பாலம்மாள்.

பொருளடக்கம்.


கட்டாயக் கல்வியும் பெண்[illegible]

(பத்திராதிபர்.)

நேபாளம்.

(சுவாமி அத்புதானந்தர்.)

வங்காளத்தின் எழுச்சி.

(ஸ்ரீமான் எஸ். ஆர். வேங்கடரமணய்யர்.)

மோட்டார் கார் பிரயாணம்.

சிறு கதை.

(சகோதரி வி. பாலம்மாள்.)

[illegible]ளரி சாண்ட் பீபி.

(ஸ்ரீமான். V. நடராஜன், B.A., L.T.)

இன்னம் பல சிறந்த வியாசங்கள்.


OFFICE OF THE [illegible]

# CHINTHAMANI

A HIGH-CLASS TAMIL MONTHLY.

EDITOR

SISTER V. BALAMMAL.

பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| சுபோதராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்) | 602 |
| கீதையின் எதிரொலி (ஸ்ரீமான் சுத்தானந்தபாரதியார்) | 603 |
| கட்டாயக் கல்வியும் பெண்மக்களும் (பத்திராதிபர்) | 604 |
| அலாற்ருமை (கோமதி) | 606 |
| கேபானம் (ஸ்வாமி அற்புதானந்தர்) | 608 |
| மார்க்கோபோலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் T. R. அனந்தநாராயண அய்யர்.) | 614 |
| வங்காளமும் அதன் எழுச்சியும் (S. R. வேங்கடராமணய்யர், B.A.) | 622 |
| இந்திய ஸ்திரீரத்னங்கள் (ஸ்ரீமான் ஸி. என். அனந்தசுப்பன்) | 627 |
| கைப்பைத்தியம்—ஒரு சம்பாஷணை (ஸ்ரீமான் T. S. K. ஸ்வாமி) | 633 |
| காப்பி குடிப்பதினால் விளையும் தீமைகள் (ஸ்ரீமான் உமாபதி அய்யர்) | 637 |
| பர்வதகுமாரி. (ஸ்ரீமான் மகேச குமார சர்மா) | 634 |
| கதர்ச்சேலை—ஒரு சம்பாஷணை (ஸ்ரீமதி குசப்ரியை) | 643 |
| ஸ்ரீராதாகிருஷ்ணலீலைக்கும்மி (ஸ்ரீமதி வி. கெ. ராஜம்மாள்) | 645 |
| சிந்தாமணி வாழ்த்து (கண்ணபுரத்துக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனார்) | 646 |
| செலிமாபேகம் அல்லது மொகல் மன்னரது அந்தப்புரம் (ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.) | 6[illegible] |
| மோட்டார்கார் பிரயாணம்—சிறுகதை (சகோதரி வி. பாலம்மாள்). | 65[illegible] |
| கற்பு (ஒரு குறிப்பு) (ஸ்ரீமான் ஸி. என். அனந்தராமய்ய சாஸ்திரியார்.) | 667 |
| அகலிகை (ஸ்ரீமான் எ. சொக்கலிங்கம் பிள்ளை) | 658 |
| சிறுவர்க்கான பக்கங்கள் | 660 |
| ராணி சாண்ட் பீபி (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.) | 662 |
| மதிப்புரை | 665 |


## பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாசமெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயங்களையே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாசமெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றி கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்கள் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும் தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பணம் அனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாரராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

# CHINTHAMANI.


A HIGH CLASS TAMIL MONTHLY.

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. I.] July 1925. [No. 12.


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः


OFFICE OF THE REGISTRAR ... MADRAS
8 SEP 1925

## சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.*

(*All Rights reserved by the Authoress.*)

### सुबोधराम चरिते

बालकाण्डः.

कृतोद्वाहैस्तनुभवैस्सह पङ्क्तिरथः पुरम् ।
प्रत्यागच्छन्नपश्यत्तं जमदग्निसुतं पथि ॥ ४६ ॥

कृतोद्वाहैः திருமணம் செய்யப்பெற்ற तनुभवैः सह புத்திரர்களுடன் கூட पुरं அயோத்தியைக் குறித்து प्रत्यगच्छन् திரும்பி வருபவரான पङ्क्तिरथः தசரதர் पथि வழியில் जमदग्निसुतं பரசுராமரை अपश्यत् பார்த்தார் ॥ ४६ ॥

कुठारधरमत्यन्तकठोरवचनं मुनिम् ।
जित्वा रामस्स्वतातस्य चक्रे भयनिवारणम् ॥ ३७ ॥

रामः ஸ்ரீராமர் कुठारधरं கோடாலியை தரித்தவரும் कठोरवचनं கடுஞ்சொல் மொழிபவரும் ஆகிய मुनिं பரசுராமரை जित्वा ஜயித்து स्वतातस्य தம் தந்தைக்கு भयनिवारणं பய நிவர்த்தியை चक्रे செய்தார் ॥ ४७ ॥

ततो दशरथः प्राप्य स्वां पुरीमात्मजैस्सह ।
वसति स्म प्रजास्सर्वाः पालयन्नीतिमास्थितः ॥ ४८ ॥

ततः பிற்பாடு नीतिं நியாயத்தை आस्थितः கை கொண்டவரான दशरथः தசரதர் आत्मजैः सह புத்திரர்களுடன்கூட स्वां தன்னுடைய पुरीं நகரை प्राप्य அடைந்து सर्वाः ஸமஸ்த प्रजाः பிரஜைகளை पालयन् (सन्) பாலிப்பவராக वसति स्म வசித்துக்கொண்டிருந்தார் ॥ ४८ ॥

राघवाद्यास्तु चत्वारस्सौशील्याद्यैर्गुणैर्युताः ।
अन्वभूवन्सुखं वीरास्स्वकान्ताभिस्समं चिरम् ॥ ४९ ॥

वीराः வீரர்களாயும் सौशील्याद्यैः நன்னடக்கை முதலிய गुणैः குணங்களோடு युताः கூடினவர்களாயும் राघवाद्याः ஸ்ரீராமனை ஆதிபாகவுள்ள चत्वारः நான்கு பெயர்களான ஸ்ரீராம பரத லக்ஷ்மண சத்துருக்கனர்கள் स्वकान्ताभिः समं தம் மனைவிமார்களுடன் चिरं நெடுநாள் सुखं போக பாக்கியத்தை अन्वभूवन् அநுபவித்தார்கள் ॥ ४९ ॥

॥ इति बालकाण्डस्समाप्तः ॥

(*To be continued.*)

REGISTRAR ... 8-SEP 1925 ... MADRAS

ஸ்ரீராம ஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் I.] குரோதன—ஆடி. [இதழ் 12.

## கீதையின் எதிரொலி.

(ஸ்ரீசுத்தானந்த பாரதியார் பாடியது.)

தன்னுள் யாவையுந் தங்கிடப் பெற்றவன்,
தாணி யெங்கிலுந் தங்குவன் தந்தையாய்,
மின்னி நெஞ்சினில் மேவிடுஞ் சோதியன்,
வெகுளி காமமறுத் தைந்தை வெறுத்தவர்
உன்னு மாறுத வும்மிறை யின்றனை
உளதிப் பூவில் உயிர்வினை செய்குவாம்! 1.

வாளுந் தீயும் வலிவுள யாவையும்
வலிய வில்லையில் வான்சுடர் அண்டிட;
கோளறும் வொளி கொண்டிடும் யாக்கையைக்
கொடுத்து நெஞ்சொடு, கோதறு மெய்யறம்
வாழ வையகம் மாண்புடன் ஆற்றுமின்
மானத் தன்னை மதிப்புடன் போற்றுமின்!
சூழும் வெந்துயர் சோர்வுறத் தாதுமைச்
சுத்த வீரந் துணையெனக் கொள்ளுமின்! 2.

வீரமுந் துணிவும் விரல் நெஞ்சமும்
வெற்றி தோல்வி விருப்பு வெறுப்பினைத்
தீர மான சூழத்தொடுந் திண்ணிய
செய்யி நெஞ்சொடுஞ் செய்கையிற் சுத்தராய்ச்
சோர்தாகுந் தியாகமுஞ் சீலமும்;
தேச மன்புஞ் சிறந்த தவத்தினர்
நேரி லாகுவர் நித்தியத் தேவராய்;
நின்மினோ அவர் நின்றிடு நன்னெறி! 3.

காத்தல் ஈசன் கடமை கருத்துடன்
கரும மாற்றிட லேகடன் மாந்தர்க்கே!
நோத்த நல்வினை நொய்யள வாயினும்
நூறு பங்கு பலனென நூல்களிற்
பூத்த வாசகம் போற்றிடும்; இவ்வுடல்
போயினும், பிறந்தே பொலி வெய்தலாம்;
ஆத்தி கத்தோ டறப்பணி யாளராய்,
ஆண்டவன் அரு ளாழியில் ஆடுமின்! 4.

தன்னறிவை யெழுப்புமின்! தானரோ,
தன்னைக் காப்பதும் மாய்ப்பதும்; தாரணிக்
கென்ன நல்வினை யேற்றுயிர் வந்ததோ,
யெண்ணி யஃதை யியற்றிச் சுதந்திரம்
துன்னவும் தருந் தோழமை பூணுவீர்!
தூய வானந்தந் தோன்றிடும்! பந்தமாம்
இன்னல் வகிட ஆத்தும வீரமே,
எங்கு மாகி யிலங்கிடும் வாழ்க்கையே! 5.

# கட்டாயக் கல்வியும் பெண் மக்களும்.

(535-ம் பக்கத் தொடர்ச்சி.)

பத்திராதிபர்.

இவ்வுண்மையைச் சற்று முணராது சீதை
யும் சாவித்திரியும் என்னென்ன பரிக்ஷைகளில்
தேர்ச்சி பெற்றிருந்தனர்? உருக்குமணி படி
த்த கலாசாலையின் பெயரென்ன? துரோப
தைக்குப் பாடம் சொன்ன ஆசிரியர் யார்?
தமயந்தி பாட புத்தகங்களை எந்தக் கம்பெனி
யில் வாங்கினாள்? என்றிவ்வாறெல்லாம் பெண்
கல்வி விஷயத்தில் வாதாடுபவர்களைப்பற்றி
நாம் சிந்தித்தல் அவசியமில்லை. ஏனெனில்
பெண்மக்கள் காலதேசவர்த்தமானங்களுக்
கேற்றவாறு புத்திசாலித்தனமாயும் அமைதி
யுடனும் எச்சமயத்திலும் கண்ணியத்தைக்
கைவிட்டு விடாத தைரியசாலிகளாகவும்
விளங்கக்கூடிய கல்வியை யடையவேண்டு
மென்பது நமதுநோக்கமன்றித் தற்காலப் படிப்
ப அறிவு வளர்ச்சிக்கான கல்வியாகவோ
பெண்மக்கட்குரிய படிப்பாகவோ சிறிதும்
ஏற்றுக்கொள்ளமுடியாது. இதை யனுசரித்
தே மகம்மதியர்கள் தற்காலத்திய கட்டாயக்
கல்வி தமது பெண்மக்களுக்கேற்காதென மறு
த்தளிக்கின்றனர். மகம்மதியரில் கோஷா என்
பது ஒரு சிறந்த கொள்கை. இதைப் பெண்
மக்களுக்குச் சிறு வயதிலிருந்தே பெரும் பா
லர் பழக்கி வருகின்றனர். இதற்கு மாறாகப்
பள்ளிக்கூடங்களிற் சென்று படிப்பது கூடா
தென்பது அவர்கள் கொள்கை. ஹிந்துப்பெண்
களுக்குக் கோஷா முறையில்லாவிடினும், எதிர்
காலத்திற்குச் சுய பாஷையில் தேர்ச்சிபெறுவ
தற்கான கல்வியை இவர்கள் நினைப்பார்களன்றி
தம் பெண்கள் ஆடவர்கள்போல் காலை முதல்
மாலைவரை பள்ளிக்கூடத்திலேயே பல வரு
ஷங் கற்கக்கூடிய தற்கால முறையை விரும்
பமாட்டார்கள் குடும்பக் காரியங்களை யனு
பவ மூலமாக சிறு வயதிலிருந்தே கற்கவேண்
டிய பெண்மகள் தனதிளமைப் பருவத்தின்
பெரும் பாகத்தையும் பள்ளிக்கூடத்தில் கழி
த்தலென்பது முடியாத காரியம். முக்கியமாய்
கட்டாயக் கல்வியின் நோக்கத்தையும் போதனை
களையும் இப்போதுள்ள கல்விச் சாலைகளைப்
போலல்லாது புதிய வழியில் சீர்திருத்தவேண்
டும். அதிலும் பெண் குழந்தைகளுக்குச் சுய
பாஷையில் நல்ல தேர்ச்சியை முக்கியமாக
வும் சிறிதளவு கணிதத்தையும் போதித்து
பள்ளிக்கூடங்களின் நேரத்தைக் குறைக்க
வேண்டும். சங்கீதம், தையல், ஆங்கிலம்
இவைகளில் பயிற்சி பெற விரும்புவோருக்கு
உபாத்தியாயர்களை யனுப்பி அவரவர் வீட்டிற்
குச் சென்று கற்பிக்கச் செய்ய வேண்டும். முன்
சொன்னவற்றை இலவசமாகவும் பின் சொன்ன
வைகளை மாதச் சம்பளம் பெற்றும் கற்பித்துவந்
தால் அதிகச் செலவின்றியுங்காலதாமதமின்றி
யும் பெண் கல்வி பரவி விடுவதில் தடை கிடை
யாது. இதை விடுத்து தற்காலக் கல்வி முறைக்
கே ஆரம்ப பாடமாக வமைத்துக் கட்டாயக்
கல்வியைப் புகட்டுவதென்றால் மற்றவர்கள்
விஷயமெப்படிப் போனாலும் பெண்மக்கள்
படிப்பு முன்னேற்ற மடையவே மாட்டாது.
மகம்மதியப் பெண்களுக்கு அவரவர்
வீட்டிற்குச் சென்று கல்வி புகட்டக்கூடிய
உபாத்தினிகளைத் திட்டப்படுத்தவேண்டும்.
இவ்வுபாத்தினிகள் மதப்பிரசாரம் செய்பவர்க
ளாக இருக்கக்கூடாது. தேச பாஷையில்
பயிற்சி யளிப்பதே ஆரம்பக் கல்வியின் நோக்க
மாக விருக்குமானால் இதனால் பெண் கல்வியபி



னது பயனளிப்பதாக ஏற்பட்டுவிடும். கட்
டாயமாக அரசாங்கம் ஏற்படுத்தக்கூடிய கல்வி
தேச பாஷை ஒன்றேயாம். அதிலும் பெண்
மக்களுக்கு முதன்முதல் போதிக்கக்கூடியது
தாய் மொழியாகும். பிற்காலத்தில் பெண்
மக்கள் தங் கணவனது உத்தரவைக் கொண்டு
ஆங்கிலக் கல்வி பயில்வதானாலும் அல்லது
தாய் பாஷையிலேயே உயர்தரக் கல்வி கற்ப
தானாலும் சுறு சுறுப்பும் கிரகிக்குந் தன்மையும்
மிகுந்திருக்கும் அவர்களின் இளம்வயதைப்பல
பாடங்களுக் கிடையே பள்ளிக்கூடத்தில் நாள்
தோறும் நெடுநேரம் கழிக்கச் செய்வதில் பெண்
மக்களுக்கு உரியதாயும் பெருமை யளிக்கத்
தக்கதாயுமுள்ள குடும்பக் காரியங்களிலும்
அவர்கள் பழக சந்தர்ப்பமேற்படாமல் போய்
விடுகிறதென்பதே நமதபிப்பிராயம். பெண்
மக்களுக்கு தையல் சங்கீதம் சிறு கைத்தொ
ழில்கள் இவைபோன்றவை இஷ்டபாடமாகை
யால்வீட்டிலுள்ளவாறே இவைகளைச் சொல்லிக்
கொடுக்கப் பெண் உபாத்திமாரை அனுப்பி
னால் சிறுவருடன் பெரிய பெண் பிள்ளைகளும்
இவற்றைக் கற்றுக்கொள்ள முன் வருவார்கள்.
சித்திரம், சங்கீதம், தையல், பிரம்பு வேலை
போன்ற சிறு தொழில்கள் இவைகளையும்
தேச பாஷைகளையும் தனித் தனியே பள்ளிக்
கூடங்களிலும் வீடுகள் சென்றும் போதிக்கக்
கூடிய பெண் உபாத்திமார்களை ஆயிரக் கணக்
காகக் கல்வியிலாகாவின் அதிகாரிகள் தயாரிக்
காதவரை பெண்கல்வி கட்டாய முறையில்
விருத்தி யடைவது முடியாத காரியம்.
இதனால் பெண் உபாத்திமார்களை தயாரிப்
பதினால் ஏழைகளாயுள்ளவர்களும் அநா
தைகளுமான பெண் மக்களும் ஆதரிக்கப்படு
வார்கள். இதனால் மகம்மதியப் பெண்மணிக
ளும் கோஷா முறைக்குச் சிறிதும் வழுவின்றி
கல்விப் பயிற்சி பெறலாம். குறிப்பிட்ட வயது
வரை நாள்தோறும் கொஞ்ச நேரத்தைப் பள்
ளிக்கூடத்தில் செலவிடுவதால் தாய்மொழியில்
எழுதவும் படிக்கவும் நல்ல தேர்ச்சி பெறும்ப
டிச் செய்தலே ஆண் பெண் இருவருக்கும் கட்
டாயக் கல்வியாகும். இதல்லாது கட்டாயக்
கல்வியை தற்காலப் படிப்பின் முறைக்கு
ஆரம்பக் கல்வி என்பதாகத் திட்டப்படுத்தும்
பக்ஷத்தில் நமது பெண் குழந்தைகளுக்குக்
கட்டாயக் கல்வி முறை ஒரு சிறிதும் உபயோ
கப் படவேமாட்டாது என்பதும் இது வழியி
லெடுக்கும் முயற்சி கைகூடாதென்பதும் நம
தபிப்பிராயம்.

---


## ஜோ தி ட ம்.

(மகாத்மாவின் விடுதலையைத் தெரிவித்த ஜோஸ்யர்).

தர்ம நியாயமான 5கேள்விகள் எழுதியனுப்பினால் எதிர்காலப் பலனைத் தெரிவிப்போம். லெட்டர் எழுதும் நேரத்தையும் குறித்தனுப்பவேண்டும். 5 கேள்விகளுக்கு ரூ. 1-0-0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 0-4-0. ஒரு வருஷம் மாதவாரி பலன் ரூ. 2-0-0. (8-2-24 சென்னை ஆந்திரபத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—திருத்தணி ஹனுமாந்உபாஸி சடகோபாசாரியார் ஸ்வாமி மகாத்மா காந்தியவர்கள் 5—2—24ல் விடுவிக்கப் படுவாரென்று 12—1—23ல் எங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்திருந்தார் அதன்படியே மகாத்மா விடுவிக்கப்பட்டார். இவரது ஜோதிடத் திறமையை மனப்பூர்வமாக விக்கியாபனம் செய்து கொள்ளுகிறோம்.) மற்றும் விவரத்திற்கு எழுதவும்.

ஆஞ்சநேயஸ்வாமி ஜோதிடாலயம்,

திருத்தணிகை, சித்தூர் ஜில்லா.

# அலராற்றுமை.

## ஓர் புதிய தேசியதுறைப் பாட்டு.

### "கோமதி" பாடியது.

குறிப்பு. காசினிக் கன்னி காந்திமதி தேவி பா சிவத்துடன் பரிவினிலமர்ந்து திருக் கோயில் கொண்டிருக்கும் நெல்லையம்பதியெனும் திருநெல்வேலியைச் செவ்வி செய்து செழுமை செய்து சிறப்புற உலவும் தாமிரவருணியெனும் காமர் நதியிலே நீராடுங்கால் *"நிமிர்ந்த நன்னடை நேருற்ற பார்வை" கொண்ட நேரிழை யொருத்தி தெய்வ அமைப்பின் திண்வலியால் திமிர்ந்த தேசியத் தொண்டேற்றுத் திரியும் குரிசி லொருவனது குமுத முகங் கண்டு கண் கலந்து, கரையற்ற காதலிரக்கத்தி லுழன்று, பாடுகள் பற்பல படர்ந்து, கடைசியில் அக்கன்னுளனையே கடிமணம் புரிந்து, களிபாட்டயர்ந்து சின்னுளிருக்குங்கால், தேசத் தொண்டினிமித்தமாக அக்காதலன் தன் ஆவியே யன்னுளையும் அகன்று எங்கெங்கோ ஏகிச் சுற்றிக்கொண்டிருக்க நேர்ந்தமையின், தையல் நல்லாள் தலைவன் பிரிவாற்றுது தனிமையில் தயங்குவது போதாது, ஊர்ப் பெண்கள் அவள் தனி நிலை குறித்துக் கூறும் அலர்ச் சொல்லையும் ஆற்றுது வருந்தித் தன் உள்ளக் கிடையை உயிர்த்தோழி யொருத்திக்கு உரைப்பதாக அமைந்துள்ள, அடியிற் றண்ட பாட்டு ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளது "விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கும் மேலானனென்ருளம் மேவு நடராஜன்" என்ற அருமையான பாட்டின் போக்கை அநுசரித்துப் பாடப்பெற்றிருக்கிறது.

## பாட்டு.

1. தண்கலந்த நெல்லைநதித் தாமிரத்தாள் எம்மைத்
        தகையாற்றி நீராட்டத் தைவரல்செய்தருணம்
    கண்கலந்தென் கருத்தெல்லாம் கவர்ந்தெனையாட் கொண்டு
        களிந்தகழுங் காதலியல் காட்டுமண வாளன்
    பண்கலந்த பழராட்டைப் பரிந்தெனக்குத் தந்து
        பாரதத்தாய் பணிக்காகப் பரவசமாய்ச் சென்றான்
    புண்கலந்து பூவையர்கள் பொழிகின்ற பேச்சால்
        பொங்குகின்றேன் என்செய்வேன் புகலாயென் தோழி.

2. தேனிருக்கும் பூந்தமிழின் தேமணங்கள் காட்டித்
        தெய்வவொளி யியல் ஞானக தெரித்தெனையாட் கொண்டு
    வானிருக்கும் வண்மதியில் வயங்குமின்பக் கவிதை
        வளமெல்லாம் என்னகத்துள் வார்த்தமண வாளன்
    கானிருக்கும் தவர்போலக் காத்திரெனக் கழறி
        கன்னுனுள் கடுந்துயரைக் களைவதற்குச் சென்றான்
    நானிருக்கும் நிலைதூற்றம் நாரியர்தம் நாவால்
        நைகின்றேன என்செய்வேன் நவிலாயென் தோழி.

* பாரதியார் வாக்கு.



3. பைதவழும் பாம்பினிலும் பாந்த விடத்தார்க்கும்
        பயங் கொள்ளாப் பான்மை யினைப் பிரிந்தெனக்குத் தந்து
    மைதவழும் முகில் நெகிழ்த்தும் மழை முகிழ்த்தும் இன்ப
        மாயங்கள் என்னகத்துள் மலர்த்தமணவாளன்
    மெய்தவழும் உயர்வாழ்க்கை மேவுகவென்றுர்த்து
        மேலானுள் மீட்சிக்காய் மேட்டிமையாய்ச் சென்றான்
    நொய்தவழும் நசுப்பினர்கள் நொடிக்கின்ற பேச்சால்
        நோகின்றேன் என் செய்வேன் நுவலாயென் தோழி:

4. மனந்தளும்பும் மையலிலே மலர்ந்ததொரு ஞான
        மகிமையினை யுணர்த்தியென்றன் மயக்கெல்லாம் மாய்த்துப்
    புனந்தளும்பும் பொற்பினிலே பொதிந்துள்ள வின்பப்
        புதுமையினை என்னகத்துள் பொறித்தமண வாளன்
    கனந்தளும்பும் கதராடை கட்டியிரு வென்றே
        காசற்றுள் கண்ணியத்தைக் காப்பதற்குச் சென்றான்
    வனந்தளும்பும் வாள்விழியர் வளர்க்கின்ற வம்பால்
        வாடுகின்றேன் என் செய்வேன் வழுத்தாயென் தோழி.

5. நீண்டாருந் துன்பங்கள் நேர்ந்திட்ட காலும்
        நெஞ்சழியா நீர்மையினை நேயமுடன் தந்து
    தோண்டாத பெருங்கடலில் துலங்குமின்பக் கவிதைத்
        தேர்ாணையை என்னகத்துள் தொகுத்தமண வாளன்
    தீண்டாமைத் தீமையினைத் தேய்த்திடுக வென்றே
        தேசத்தாய் தேசுக்காய்த் தீவிரமாய்ச் சென்றான்
    வேண்டாத வெம்மையுரு வீணியர்தம் பேச்சால்
        வேர்க்கின்றேன் என் செய்வேன் விளம்பாயென் தோழி.

6. துரியவழி மெய்யுணர்ந்த தூரவியர்தம் தெளிவைத்
        தோமறு நல் இல்லறத்தில் துன்றுமியல் காட்டிச்
    சுரியவிழின் சோபை யலர் சூரியனிற் சொக்கும்
        சுத்தமயம் என்னகத்துள் சொருகுமண வாளன்
    அரியவழி அன்பேயாம் ஆகங்கொள் என்றே
        அன்னையவள் அபர்வகற்ற ஆர்வமுடன் சென்றான்
    கரியவிழிக் காரிகையர் காலுகின்ற பேச்சால்
        கவல்கின்றேன் என் செய்வேன் கழறுயென் தோழி.

## பொருட் குறிப்புகள்.

பாட்டு 1. தாமிரத்தாள், தாமிரவருணி நதி. தகையாற்றி, களைப்பற்றி. தைவரல் செய் தருணம், அன்பாகத் தடவிக் கொடுக்கும் தருணம். பண், இசை.

பாட்டு 2. தெரித்து, தெரிவித்து. நவர், தவசியர்கள்.

பாட்டு 3. பைதவழும், படத்தைப் பொருந்திய. பரந்த விடத்தார்க்கும், மிகுதியான விஷங்கொண்டவர்களுக்கும். மைதவழும் முகில், கருநீல நிறங்கொண்ட மேகம். மலர்த்த, மலர்வித்த. மெய்தவழும், சத்தியத்தைக் கடைப்பிடித்துள்ள. ஆர்த்து, சொல்லி. நொய்தவழும், நொய்மைகொண்ட, நுட்பமான. நுசுப்பினர்கள், இடையுடைய பெண்கள். நுசுப்பு, இடை.

பாட்டு 4. புனம், வயல்கள். பொற்பு, அழகு. கனந்தளும்பும், பளுவுகொண்ட. கனம், கண்ணியம், என்றுங் கொள்ளலாம். காசற்றாள், மாசற்றவள். காசு, மாசு. காசு, பொன் என்று பொருள்கொண்டு, காசற்றாள், உற்ற செல்வமிழந்து தவிப்பவள் என்றும் பொருள் கொள்ளலாம். வனம் தளும்பும், அழகு நிறைந்துள்ள. வாள்விழியர், ஒளிக்கண்கள் அல்லது வாள்போன்ற கண்கள் உடைய பெண்கள்.

பாட்டு 5. வேண்டாத வெம்மை உகு வினியர், அநுவசியமான சூடான மொழிகளைச் சிந்துகின்ற வீண் வம்புப் பெண்கள். வேர்க்கின்றேன், துயர் மிகுதியால் உடல் வியர்க்கின்றேன்.

பாட்டு 6. துரிய வழி மெய், ஆத்ம ஞான நெறியுண்மை. தோம் அறு நல் இல்லறம், குற்றமற்ற சிறந்த இல்லறம். துன்றும் இயல், பொருந்தும் இயல். சுரி அறிம் இன்சோபை அலர் சூரியன், சுழற்சி செய்து இனிய ஒளிபரப்பும் சூரியன். ஆகம் கொள், நெஞ்சிற் கொள். காலுகின்ற, கக்குகின்ற.

# நேபாளம்.

### சுவாமி அற்புதானந்தர்.

"காசி காச்மீரம் அஜப் நேபாளம்" என்று இந்தியாவில் ஒரு பழமொழியுண்டு. இந்நேபாளம் ஹிமயமலைச் சார்பிலுள்ள ஒரு தனி அரசு நாடு. இவ்வரசியலில் மூன்று முக்கிய நகரங்களுண்டு. இவைகளை காட்மண்டு, பாடன், பாத்காம் என்பர். இவைகளில் முக்கியமானவைகளாக முதலிரண்டு நகரங்களையுஞ் சொல்வர். இவைகளின் பூகோள நிலைகளை நன்கறியப் போதிய ஆதாரங்களுமில்லாமலிருப்பதுடன் மிக்க அவசியமெனவும் கருதப்படவில்லை. ஆகவே, பண்டைய சரிதை நாட்களினாரம்பத்திலிருந்து இந்நாடு இரு ஆறுகளாகிய பாக்மதி, விஷ்ணுமதி என்றவைகளுக்கிடையில், பௌத்தர்களினுடைய இந்துக்களினுடையும் குடியேறப்பட்டுள்ள நன்னகரங்களின் திவ்விய நாடெனக் கருதலாகின்றது. இவ்விருமதங்களின் அநேகாநேக முக்கிய தீர்த்த ஸ்தலங்களிருப்பதுடன் சில்லரைக் கோயில்களும் இங்கு பரவியுள்ளன. தற்சமயம் இந்நாடுகளுக்குச் செல்வதற்கு இருமார்க்கங்களுள்ளன. ஒன்று கோரக்பூர் (ஐக்கியமாகாணம்) வாயிலாகவும், மற்றொன்று ரக்ஸௌல் (பீஹார்மாகாணம்) வாயிலாகவும் செல்லலாம். இருநகரங்கள்வரை வங்காள வடமேற்கு ரெயில்வே செல்கின்றது. காட்மண்டு என்ற நகரத்தின் பெயரை இவ்வரசியலின் தலைமை நகரம் ஏற்பட்ட சமயமிருந்து உண்டாகியதென்பர். அதாவது நேபாளத்தில் இந்துக்களின் அரசியல் ஏற்படும் சமயம், அரசனின் மாளிகை தயாரிக்கப்பட்ட நாளையில், ஒரு பெரும் மாத்



தின் பாகங்களைக் கொண்டே கட்டப் பட்டதின் காரணமாக இந்நகரத்திற்கு காட்மண்டு (காட் = மரம், மண்டு = துண்டுகள்) எனப்பெயருகிற்றெனவும் சொல்வர். இம்மரத்தை இவ்வமயம் காரோவென்று சொல்வர். இவை ஏராளமாக நேபாளத்திலுள்ளன. ஆனால் இவ்வமயத்தின் நிலைகளை அவ்வமயத்தோடு ஒப்பிட்டுக் கவனித்தால் இதைக் கட்டுக்கதையெனவே கூறவும் முற்படலாம். ஆயினும் அவ்வமயமரங்களெல்லாம் இவ்வழகிய நகரம் தயாரிப்பதில் வெட்டுண்டு போகவும், தற்சமய மரங்கள் அவைகளின் புதருகளின் விளைவுகளெனவே மதிக்கவுமாகலாம். இந்நாட்டின் மலைப்பிராந்தியங்கள், இந்நகரமும், (காட்மண்டு) பாடனும், பாத்காமும் குடியேற்ற நகரமாகு முன்னர் வடபாகத்தில் பசுபதியும், தென்பாகத்தில் அகிதாமும், மேற்குபாகத்தில் சுயம்புநாதரும், இந்துக்களின் முக்கிய தீர்த்த நாடுகளாக பாகமதி (இந்நதியை பானுமதியெனவும் சொல்வர்) யும், விஷ்ணுமதியும் என்ற ஆறுகளினிடையிலிருந்தன. இம்மூன்று நகரங்களும், இம்மூன்று கோயில்களின் அருகில் ஏற்பட்டிருப்பதன் காரணமாக இந்நேபாள நன்னாடு திரிகோண பூமியாய் ஹிமயமலைச்சார்பில் சீன நாட்டின் பிரதிநிதித்துவங்களைக் கொண்டு பல பல்லாண்டுகளாக இருந்து உள்ளதெனவே இந்நாடுகளில் யாத்திரை புரிந்தவர்கள் அங்கீகரிப்பர். இந்நாடுகளின் விபரம் சரிதை ஆராய்ச்சியனர்களும் நேபாள யுத்தங்களின் விபரங்களை இந்து தேச சரித்திரத்தில் வாசித்துள்ளவர்களும் நன்கு அறியலாம். ஆனால் இவ்வமயம் நாம் முற்பட்டுள்ளவை இந்த நாடுகளின் மதப் போக்குகளை மட்டும் கவனிக்க கருத்துக் கொண்டுள்ளதினால் இவைகளை வேறு சமயத்திற்கு என விட்டு விட்டு வரைவோம். முக்கியமாக நேபாளத்தை முற்கூறிய வண்ணம் சைவ பௌத்த ஸ்தலமெனவே கூறப்படும். எனினும் விஷ்ணு மதத்தினர்களுக்கு இங்கு ஒன்றுமில்லை என கூறுவதற்கு நாம் விஷ்ணுமதியெனக் கூறியுள்ளபடியினால் இவைகளை வெளிப்படையாய்ச் சொல்வதற்கு அவசியங்களுமில்லை. சாதாரணமாக இந்நாட்டின் சைவ ஸ்தலமாகிய பசுபதிநாதத்திற்குள்ள ஆதாரங்களை மகாபாரதத்தில் காணலாம். பஞ்சபாண்டவர்கள் பதிரவனயாத்திரை ஏகினகாலத்தின் சமயம் இவ்வாதாரங்களைப் பகுத்தறியலாம். ஹிமயமலையில் பத்திரிநாதம், துங்கநாதம், திருஜுகிநாதம், கேதாருநாதம் என்ற நான்கு முக்கிய தீர்த்த ஸ்தலங்களுள. இந்நான்கு தீர்த்த ஸ்தலக் கோயில்கள் நான்கு சிகரத்தில் நான்கு அருவிகளின் கரைகளிலுள்ளன. முன் மூன்றையும் இந்நிருபத்தில் கவனித்தால் விரியுமென இவையையும் வேறு சமயத்திற்கென ஒதுக்கி வைத்துவிட்டு, கேதார நாதத்தைப் பற்றிக் கவனித்தால், இத்தீர்த்த ஸ்தல கோயிலுக்கும் நேபாள தீர்த்த ஸ்தல கோயிலாகிய பசுபதி நாதத்திற்கும் இணைப்புகளேற்பட்டுள்ளன. முன்னதில் பிருஷ்டபாகமும், பின்னதில் அக்ரமுக ஸ்வரூபமும் ஏற்பட்டுள்ளன. இக்கோயிலின் பிரதிநிதியாகவே காட்மண்டுவின் அரசன் ஏற்பட்டிருக்கலாமென ஊகிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கேதார யாத்திரை செய்தவர்கள் பசுபதி நாதத்திற்கு அவசியம் செல்லல்வேண்டும். ஏராளமான வரும்படி இக்கோயிலை ஒட்டிக் கிடைத்துக்கொண்டிருந்ததினால் இங்கு ஒரு பிரதிநிதி ஏற்பட்டிருந்திருத்தல்வேண்டும். பின்னர் நாளாவட்டத்தில் இந்நகரம் இந்நாட்டிற்குத் தலை நகரமாகி இருத்தல்வேண்டும். இவ்வமயத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதியும் இங்குள்ளார். சிவராத்திரி சமயங்களின் உற்சவத்தில் நேபாள அரசியலும் பிரிட்டிஷ் பிரதி நிதியும் தம் வைபவங்களுடன் கலக்கின்றதும் ஒரு

விசேஷமாகவே யிருக்கும். இந்நகரத்தில் ருத்திர விருக்ஷங்கள் அநேகம்: வெண்கலவார்ப்பட வேலைகளாகிய பூஜை சமான்கள் மிக்கவும் அழகாகவே இருக்கும். பெரும் மணிகளும் இங்கு வார்க்கப்படும். இச்சிவராத்திரி சமயத்தில் மட்டும் சுமார் ஒரு மாதத்திற்கு வழி மார்க்கம் திறக்கப்பட்டு நேபாள அரசியலின் அனுமதிச் சீட்டுடன் இந்தியாவின் மக்கள் இங்கு செல்லலாகின்றனர். ஏனைய நாட்களில் செல்ல விரும்புவோர் பிரிட்டிஷ் அதிகாரியின் வாயிலாகப் பிராந்திய மாகாணத்திலிருந்து உத்திரவுகள் கொண்டுதான் செல்லலாகும். சாதாரணமாக இந்து மதத்தினர்களின் சைவ வைணவ உதாஸின ஜோக்கி வகையறுக்களின் மடங்கள் பானு கங்கையின் கரையிலுள்ளன. ரக்செளல் மார்க்கம் செல்பவர்கள் பானு கங்கை (பாகுமதி நதி)யைத் தாண்டி இறங்கிதான் செல்லல்வேண்டும். பாலங்கள் கிடையா; தண்ணீர் சிவராத்திரி சமயம் கணுக்காலுக்கு மேலும் முழங்காலுக்குக் கீழும் தானுள்ளது. இந்நதிக் கிப்புறம் பிரிட்டிஷ் எல்லை; அப்புறம் நேபாள எல்லை. இங்கு சமீபத்தில் பீர்கஞ்சு என்ற நேபாள சவுணி உள்ளது. மிக்க அழகிய சிறிய நகரம். மாமரங்களினால் சூழப்பட்டு இடையிடையில் சிறிய கணவாய்களினால் நீர்பாய்ச்சல்கள் கொண்ட நாடு. இங்கு சிவராத்திரி செல்வர் யாவரும் நேபாள அரசியலின் கைபொப்பமிட்ட அனுமதி சீட்டுகள் பெறவேண்டும். சாதுக்களுக்கு வித்தியாஸமில்லாமல் அனுமதிச் சீட்டும் செலவுக்கு நபர்களுக்குத் தகுந்தபடி தட்சணைகளும் கொடுக்கப்படும். இல்லற சமூகம் இவ்வமயங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகளின் அனுமதிச் சீட்டுகள் (சிவராத்திரி சமயத்தில்) கொண்டுள்ளதற்கு ஆவசியகங்களுமில்லை. சிவராத்திரி பசுபதி தெரிசனத்திற்கென அனுமதிச் சீட்டுகள் கட்டணமில்லாமலே சகல இந்துக்களுக்கும் கிடைக்கும். ஏனைய மதத்தினர்களுக்கு ஏனைய சமயங்களுக்கு யாவரும் பிரிட்டிஷ் பிரதிநிதியின் ஆக்ஞை யில்லாமல் செல்வதற்கு இயலாது. எனவே மாகாண அரசியல் வாயிலாக இவ்வனுமதிச் சீட்டுகளையும் சுலபமாகவே பெறலாம். இவைகளை பீர்கஞ்சிலும் ஏனைய பாட்டைசவுகிகளான பைஸாகோரி, சீசாகடி, சந்திராகடி முதலியவைகளில் காட்மண்டு ஏகு முன்னர் பரிசோதிக்கப்படும். சீசாகடி, சந்திராகடி என்ற பாட்டை சவுகிகள் உயர்ந்த குன்றுகள். இங்கு ஜல வசதிகளும் உணவு வசதிகளும் நேபாள அரசியலினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஜாதி வித்தியாஸம் என்பது கிடையாது: யாவரும் கிட்டத்தட்ட மாமிச ஆகாரிகளே. எருமைத் தோலில் தண்ணீர் மொண்டு வந்து இக்குன்றுகளில் பெரும் முடாக்களில்வார்த்து வைத்திருப்பர். இத்தண்ணீர் இடம் அரசியல்களின் மக்களுக்குப் பொதுவானது. ஜோடு செருப்புகளை உபயோகித்து உட் செல்லல்மட்டும் கூடாது. அருகிலுள்ள தேங்காய் முழுக் கொட்டாங்கச்சி அகப்பையைக் கொண்டு பக்கத்திலுள்ள லோட்டாவை எடுத்து மொடாவிலிருந்து தண்ணீரை மொண்டு வார்த்துக்கொண்டு சற்றுதூரத்தில் உட்கார்ந்து சாப்பிடலாம். நின்று சாப்பிடுகிறவர்களுக்கும் இப்பாட்டைச் சவுகிகளில் தடங்கல் கிடையாது. ஆயின் கலப்பு கொண்டவனென நாட்டினர் மதித்து புழங்க அஞ்சுவர். அவல் தயிர் முதலியன முதல் தரமானவைகளாகக் கிடைக்கும். கடைக்காரர் கோழி வளர்ப்பர். முட்டை மீன் முதலியவைகளிலும் வியாபாரம் அருகிலேயே செய்வர். பிராமணர்களும் எக்ய யாக கருமங்களில் மாமிச ஆகுதிகளை யிடுவதும் சமயத்துக்குகந்தவாறு உண்ணுவதிலும் முற்பட்டிருப்பதினால் வெறுப்புகள் கிடையா. களவு வியப



சாரம் மிக்கக் கொஞ்சம். ஆண் பெண் அடங்கலும் ஆயுதபாணிகளாக 'குக்ரி' என்றவாளை ஏந்தியே செல்வர். காஷ்மீரத்தின் அழகைப் போலவே நேபாளத்திலும் அழகு ஸ்திரீகள் மிக்கனவாக உள்ளது. ஆடவர்கள் பெரும் வீரர்கள். அவர்களைப்போலவே தம்மைப் பாதுகாத்துக்கொள்வதில் பெண்களும் மிக்க வீரர்கள். களவுக்கும் வியபசாரத்திற்கும் அரசியலிலும் கடும் தண்டனை ஏற்பட்டுள்ளன.

* * *

பாடன் என்ற நகரம் மிக்க அழகிய வீதிகளைக் கொண்டுள்ளது. காட்மண்டுவைப் போலவே வீடுகள் எல்லாம் மரங்களினால் செதுக்குவேலைகளைக் கொண்டு மாளிகைகளாகவும் பெரும் வீடுகளாகவுமுள்ளன. இந்நகரம் எங்ஙனம் இந்துக்களால் முன்னகரம் பிரதிபாதிக்கப்பட்டுள்ளதோ, அங்ஙனமே பௌத்தர்களால் பிரதிபாதிக்கப்பட்டு பௌத்த அரசியல் நாட்களில் தலைமை நகரமாகவே ஏற்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. இங்கும் கல் மரம் பித்தளை முதலியவைகளின் அரிய வேலைகளைக் காணலாம். இங்குள்ள தர்பார் மைதானம் காட்மண்டுவைக் காட்டிலும் சிறப்புள்ளவையாகவே இருந்திருக்கவேண்டுமெனவே நம்பவேண்டியதாகுகின்றன. ஆனால் இந்நேபாள நாட்டின் மக்கள் குர்க்கியர்களாயிருந்து மதமார்க்க ஒழுக்கங்களிலிருந்ததின் நிமித்தமாக சமய விபரீதங்களில் பௌத்த மதத் தலைமை நகரமாக பெருகிவர முற்பட்ட நகரத்தை சீரழித்த விபரீத கொள்ளைகளையும் மதாபிமான உன்மத்தங்களையும் சொல்லலாகாது. எவரும் இதன் ஒரு சமய அழகையும், இவ்வமய சீரற்ற நிலையையும் சொல்லவும் கூடியவராகுவர். இப்பௌத்த அரசியலின் மாளிகைகளின் சிற்பர்களின் திறமைகளையும் செதுக்குவேலை நிபுணர்களின் வல்லமைகளும் இவைகளில்நீலம் சிகப்பு பொன் இழைக்கப்பட்டிருந்த அவ்வமயத்தின் வைபவங்கள் இவ்வமயத்தில் சிதருண்டு இங்குமங்கும் சிறு ஸ்தூபிகளும் பெரும் மண்டபங்களும் பெரும் சிகரம் கொண்டகோயில்களும் உள. இவைகளைச் சீரழித்த உன்மத்தர்களின் வம்சத்தினர்களினால் பாதுகாக்கப்பட்டும், கழுகு தலைச் சிங்கம், காண்டாமிருகம், கருங்குரங்குகள் முதலியவைகளினால் சூழப்பட்டும் சிறு பறவை யினங்கள் தங்குவதற்கென இக்கட்டிடங்களின் இடை இடையில் பெரும் புதர்களும் அடர்ந்த செடிகளையும் கொண்டுள்ளன. எனினும் உலகின் பௌத்த மக்களுக்கு இந்நகரமும் கோயில்களும் பெரும் யாத்திரை ஸ்தலமாகவேயுள்ளன வென்பதற்கு வருடா வருடம் இங்கு வரும் யாத்திரிகளின் கணக்கற்ற தொகைகளினால் தெரிகின்றன. இவர்களும் இவ்விதமான அதிசய சிற்பக் கட்டிடங்கள் இல்லையெனவே சொல்வாராகுவர். சுமார் 2000 வருடங்களுக்கு முன்னர், அசோக சக்கரவர்த்தியார் இந்நகரத்திற்கு விஜயஞ் செய்தனர். இவர் வந்ததின் காரணம் யாதெனில் பௌத்த பகவானே இந்நகரத்திற்கு விஜயஞ் செய்து இவ்வேகாந்த வெளியில் தியான நிஷ்டையில் அமர்ந்தனர். எனவே இச்சக்கரவர்த்தியார் இப்பாடன் நகரத்தில் தம் நியாபகார்த்தமாகப் பெரும் சின்னத்தை ஏற்படுத்தியுள்ளார். இவ்விதமான சின்னம் இந்தியாவில் எங்குமில்லையெனவே சொல்வர். இச்சின்னம் ஒரு பெரும் ஸ்தூபியையும் நான்கு புரத்திலும் நான்கு பெரும் ஸ்தூபிகளையும் இந்நகரின் எல்லைகளாக ஏற்படுத்தினார். இந்நாள் வரை இந்தஸ்தூபிகள் நன்றாகவே இருக்கின்றன. இதன் சில்ப வேலைகள் இணையற்றவைகள். மேனாட்டுச் சிற்ப நிபுணர்களால் பெரிதும் சிலாகிக்கப் பட்டுள்ளன.

இந்நகரில் மச்சந்தரநாதரின் கோயில் ஒன்றுள்ளது. இம்மச்சந்தரநாதர் குருகோரக்நாதரின் குரு ஆகுவர். கோரக்நாதரின் பரம்பரையினர்களை தர்சனிஜோகி என்பர். இவர்களின் தலைமை பீடம் இவ்வமயம் பஞ்சாபில் போஹர் என்ற இடத்திலுள்ளது. தற்சமயமகந்து மிக்க கல்விமான்: தம் பொருளிலிருந்து பல பாடசாலைகளைத் தம் மத சிஷ்ய தர்சனி ஜோகிவர்க்கத்திற்கென ஏற்படுத்தி சம்ஸ்கிருதஹிந்தி வித்துவான்களாக்கிவருகின்றனர். இம்மச்சந்தரநாதர் கோரக் நாதரை சிஷ்யராக்கின பின்னர், இலங்கை நேபாளம் முதலிய தீவுகளுக்குச் சென்றுள்ளார். இந்தியாவில் கோரக்நாதர் தர்சனீக ஜோகி மதத்தைப் பிரதிபாதனம் செய்து வந்தனர். இவர் கோரக் சதகம், கோக்ஷகல்பம், கோரக்ஷ ஸஹஸ்ர நாமம் என்ற சம்ஸ்கிருத கிரந்தங்களை தம் மத அவலம்பனத்திற்கென வரைந்துள்ளார். இவரின் சிஷ்யனை பர்துரு ஹரிநாதரென்பர். இவர் விக்ரமாதித்தியனின் சகோதரர். இவரும் வைராக்கிய சதகம், சிருங்கார சதகம், நீதி சதகமென மூன்று பாகங்களடங்கிய அரிய சம்ஸ்கிருத நூல் ஒன்றும் வரைந்துள்ளார். ஆகவே கோரக் நாதரை கபீர்தாசரின் சமயத்திலிருந்ததாகவும் சொல்வர். கபீர்தாசர் சுமார் 14-ம் நூற்றாண்டிலிருந்தனரெனவும் அபுல்வஜல், ஹாமில்டன், வார்ட், கோல் புரூக் முதலிய சரிதை ஆராய்ச்சியினர்கள் கூறியுள்ளனர். இவ்வாதாரங்களினால் கோரக் நாதரைப் பதினொன்றாம் நூற்றாண்டின் முன்பாகங்களிலும் மச்சந்தரநாதரைப் பதிமூன்றாம் நூற்றாண்டின் பின் பாகங்களிலும் இருந்ததாக அங்கீகரிப்பதில் மச்சந்தரநாதர் வரைந்துள்ள ஹட்டி தீபிகை என்ற சம்ஸ்கிருத நூலும் ஆதாரவாக ஏற்படும். இம்மச்சந்தரநாதர் நேபாள நாட்டிற்கு ஏகின சமயம் பாடன் பௌத்த மதத்தில் ஒழுகிக்கொண்டிருந்த நகரமாகவேயும், இவரால் பௌத்த மதம் கண்டிக்கப்பட்டு தர்சனீக யோகிகளின் சைவமதம் பெருகினதாகியுள்ளது. இவ்வமயம் இந்நகர மச்சந்தர நாதர் கோயில் பண்டைய பௌத்தமதக் கோயிலாக இருந்ததையே பௌத்த விக்கிரஹத்துடன் மச்சந்தர நாதரின் கோயிலாக ஏற்பட்டுள்ளதெனவும் சொல்வர். இங்கு பௌத்தமதம் தாழ்வற்று (பௌத்த கயையின் சரிதையைப்போல) மச்சந்தர நாதரின் மதம் பெருகவே வருடா வருடம் ஒரு பெரும் இரத யாத்திரை ஏற்படுகின்றது. இந்த இரத யாத்திரையில் நேபாள அரசரும் பிரிட்டிஷ் பிரதி நிதியும் ஈடுபடுவர். இந்த இரத யாத்திரை ஏற்படும் சமயம் நேபாள நாட்டினர் உழுது விதை விதைத்து விட்டு மழையை யெதிர் பார்க்கும் சமயமாகவே இருக்கும். இந்த இரதம் கோயிலிலிருந்து புறப்பட்டு திரும்பிக் கோயில் வந்தவுடன் பெரும் மழை வருடாவருடம் பெய்யும். இது இந்நாட்டின் மக்கள் வசித்துள்ள ஒரு பெரும் அதிசயம். இவ்விதமாக இவ்விரத விழா ஏற்பட்ட நாள்முதலிருப்பதினால் இந்நகரின் பௌத்தர்களும் நேபாளத்தின் பௌத்தமதக் குடிகளும் மச்சந்திரநாதரின் மகத்துவத்தில் பற்றுகள் கொள்ளவேண்டியவர்களாகவே முற்படுவர்.

* * *

பாத்காம் நகரத்தின் விமரிசைகளும் சாமானியமானவைகளல்ல. இந்நகரம் காட்மண்டுவிற்கும் பாடனிற்கும் எட்டு மைல் தூரத்திலுள்ளது. இந்நகரமும் முன்னவைகளைப்போல தர்பார் மைதானமொன்றைக் கொண்டுள்ளது. இந்நகரத்தின் இராஜ மாளிகை வாயிற் கதவு அழகிய செதுக்கு வேலைகளையும் பொன் தகடுகளையும் கொண்டுள்ளது. இது ஆசியாக் கண்டத்தில்மிக்க அழகியசித்திர வேலைகளைக்கொண்டுள்ளது. திபெத்து முதலிய நாடுகளிலும் இதை வெல்லக்கூடிய வகையில் செதுக்கு வேலைகளையாவது சித்திர வேலைகளையாவது கொண்டுள்ள கட்டிடங்களில்லை. இந்நகரில் ஐந்து கோபுரக் கோயில் ஒன்றுள்ளது. இந்நகரில் தெருக்கள் மிக்கஅழகியவையாகவே உள்ளன. இந்நாட்டின் மக்களை நேபாளிகள் நீவாரிகளென்பர். இங்கு சங்கு நாராயணனின் கோயிலும் ஒன்றுள்ளது. இது விஷ்ணு பிரதிபாதித் தீர்த்த க்ஷேத்திரம் இதனருகிலிருந்துதான் விஷ்ணுமதி ஆரம்பமாகின்றது. இக்கோயிலைத் தெரிசிப்பதற்கும் நேபாள கவர்ண்மெண்டின் அனுமதிச் சீட்டு கிடைத்தல் வேண்டும். இவ்வனுமதிச் சீட்டு சுலபமாகக் காட்மண்டுவில் கிடைக்கப் பெறலாம். வெளிநாட்டினர்களுக்கே நேபாளத்தில் பசுபதி கோயில் மிக்க முக்கியமானது. உள்நாட்டினர்களுக்கு மச்சந்திர நாதரும் சங்கு நாராயணரும் தான் முக்கியமானவை. சிவராத்திரியின் வைபவங்களை நேபாளியர்கள் தத்தம் இல்லங்களிலேயே கொண்டாடுவர். எனவே காட்மண்டுவிற்கு அவ்வமயத்தில் தெரிசனார்த்தமாக வருபவர்கள் வெளி நாட்டினர்களும் ஒரு சிறிய நேபாளியருமாக இருக்கலாகும். ஆனால் மச்சந்திரநாதரின் விழாவிலும், சங்கு நாராயணனின் விழாவிலும் முற்படும் மக்கள் நேபாளியர் நீவாரியர் ஏராளமாகவும் வெளியினர்கள் சொல்பமாகவும் இருப்பர். இம்மூன்று விழாக்களையும் தெரிசித்துக் கொண்டு வெளி நாட்டினரான இந்தியர்கள் நேபாளத்திலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி விடவேண்டும். பலர் ஒரு மார்க்கமிருந்து ஏனைய மார்க்கத்தின் வழியாகவே திரும்புவர். அதாவது கோரக்பூர் மார்க்கம் நேபாளத்தில் புகுவர். பீர்கன்ஜு மார்க்கம் வெளியேறுவர். சிலர் ரக்செளல் பீர்கன்ஜு மார்க்கம் புகுவர். கோரக்பூர்மார்க்கம் வெளியேறுவர். இவர்களில் சாதுக்கள் முக்திநாத், பிரம்மகபாலம் என்ற சிகரங்களைத் தெரிசித்துக்கொண்டு கேதாரம், பதிரி, துங்கநாதம் என்ற ஹிமாலய சிகரங்களுக்கு வருவர். இவ்வழியில் மடங்களையும், ஆடு மாடுகளை மேய்ப்பவர்களின் குடிசைகளையும், குகைகளையும் தவிர வேறு பெரும் நகரம், கடை முதலியன உணவு சாமான்களைக் கொண்டிருக்கவும் கிடைக்காது. இவ்வழியிலும் வெகு சில சாதுக்களே யாத்திரை புரியத் துணிபு கொள்வர். துணிபும் பயனற்றதாகாது. நல்வரவேற்புகளுடன் ஹிமாலய மலைச் சஞ்சாரம் செய்து தீர்த்த ஸ்தல யாத்திரை புரிந்து பதிரிகேதாரம் வந்து ஐக்கிய மாகாணத்தில் இறங்கவும் செய்யலாம். இல்லையேல் அம்மார்க்கத்தில் உள்ள பிரிவு பாதைகளின் வழியாய் பூடான் திபெத்து முதலிய நாடுகளுக்கும் யாத்திரை புரிந்து வங்காளத்திலும் பாஞ்சால நாட்டிலும் வந்திறங்கலாம். எனவே அஜப் நேபாளத்தைக் கண்டுகளிக்க இந்தியர்கள் முற்பட வேண்டியது மிக்க அவசியம்.



EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

# மார்க்கோபோலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான். T. R. அனந்த நாராயண அய்யர்.

(565-ம் பக்கத் தொடர்ச்சி.)

## ஏழாம் அத்தியாயம்.

சிறு ஆர்மீனியா, துருக்கிஸ்தானம், பெரிய ஆர்மீனியா, ஜார்ஜானியா, மொஸல், பால்டெக், பாக்தாது தாரஸ், முதலிய நகரங்கள். ஒரு விசேஷமான பூகம்பம்.

ஆர்மீனியா இரண்டு பிரிவுகளுள்ளது. ஒன்றின் பெயர் சிறு ஆர்மீனியா, மற்றொன்றின் பெயர் பெரிய ஆர்மீனியா. சிறு ஆர்மீனியா தேசத்தரசன் ஸெபஸ்ட் என்னும் ஊரில் வசித்துக்கொண்டு நீதி வழுவாமல் செங்கோல் செலுத்தி வருகிறார். இவ்விராஜ்யத்தில் அநேகம் நகரங்களும் கோட்டை கொத்தளங்களுமிருக்கின்றன. பூமி வளமாயிருப்பதினால் மனிதர்க்கு வேண்டிய எல்லாத் தானியங்களும் விளைகின்றன. வேட்டைக்கு யோக்கியமான காட்டு மிருகங்களும் பக்ஷிகளுங்கூடக் குறைவில்லாமற் காணப்படுகின்றன. ஆனால் இந்நாட்டுக் காற்று மாத்திரம் அதிக செளக்கியமானதல்ல. முற்காலத்தில் இந்நாட்டு மனிதர்கள் அதிக திடகாத்திரராகவும் சுத்த வீரர்களாகவும் விளங்கினார்கள். தற்காலத்தில் குடியும் பெருந்தீனியும் அதிகரித்து விட்டதனால் அவர்கள் பார்வைக்குமாத்திரம் லக்ஷணமாகவும் வாஸ்தவத்தில் பேடிகளாகவும் இருக்கின்றனர். இந்நாட்டில் கடற்கரையில் கியாஸா என்ற ஒரு நகரமிருக்கிறது. அது ஒரு சிறந்த துறை முகமானதினால், அங்கு அதற்குக் கிழக்கிலுள்ள தேசங்களிலுண்டாகும் பலவித வியாபாரச் சரக்குகளை—விசேஷமாக சிலவகை வாசனைத் திரவியங்களையும், விலையுயர்ந்த மற்ற வேறு அநேக சரக்குகளையும் வாங்கவோ விற்கவோ, தொலைதூரமான பல தேசங்களிலிருந்தும் வியாபாரிகள் வருகிறார்கள். வெனிஸ், ஜினோவா நகர வியாபாரிகளுங்கூட அங்குச் செல்வதுண்டு. இக்காரணங்களால் இந்நகரத்தைக், "கீழ் நாடுகளின் சாயமான சந்தை" யென்றே சொல்லலாகும்.

துர்க்கோமானியாவில் மூன்றுவித ஜாதியாரிருக்கின்றார்கள். அவர்களுள் ஒரு ஜாதியாருக்கு துர்க்கோமான்கள் அல்லது துருக்கர்கள் என்று பெயர். இவர்கள் மஹம்மது சமயத்தை அநுசரிப்பவர்கள்; எழுதப் படிக்கத் தெரியாத மூடர்கள்; கொடியவர்கள்; தங்களது கன்று காலிகளுக்கு ஏராளமான மேய்ச்சல் கிடைக்கக்கூடிய மலைகளிலும் வேறு எட்டாத இடங்களிலும் சஞ்சரிப்பவர்கள், தங்களதுகன்று காலிகளைத் தவிர இவர்களுக்கு வேறு ஆஸ்தி கிடையாது.

இந்நாட்டில் துருக்கிக் குதிரைகள் என்ற சிறந்த குதிரைகளுண்டு. இந்நாட்டுக் கோவேறு கழுதைகளும் பெயர்போனவை.

இந்நாட்டிலுள்ள மற்றைய ஜாதியார்களுக்கு கிரேக்கர்களென்றும் ஆர்மீனியர்களென்றும் பெயர். இவர்கள் வியாபாரமும் கைத்தொழிலும் செய்து நாடு நகரங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் செய்யும் கம்பிளிகளே உலகத்தில் சிறந்தவை. இவர்களது முக்கிய நகரங்கள் காக்னோ, இகோனியம், ஸீஸாரியா, கிறிஸ்துவுக்கு அடிமை பூண்ட காரணமாக உயிரிழந்த பேஸில் முனிவரது ஸ்தலமாகிய ஸெபஸ்டி, ஆகிய இவையாம்.



இவர்கள் தார்த்தார்களது அரசனான கான் ஒருவனுக்கு அடங்கி யிருக்கின்றனர்.

பெரிய ஆர்மீனியா மிகப் பெரிதான ஒரு ராஜ்யம். அதுவும் தார்த்தார்களது ஆளுகைக்குட்பட்டதுதான். அதிலும் அநேக நாடு நகரங்களிருக்கின்றன. அவற்றின் தலைநகருக்கு ஆர்ஜிஞ்கியா என்று பெயர். அங்கு செய்யப்படும் துப்பட்டியே உலகத்திற் சிறந்தது. அங்கு மனிதர்களது சொறி சிரங்குகளையும் பிணிகளையும் போக்க வல்ல ஆரோக்கியமான வென்னீர் ஊற்றுகள் அநேகம் இருக்கின்றன. தலை நகருக்குப் பின் பிரவித்தமான பட்டணங்களுக்கு அஸ்கிரான், டார்ஸஸ் என்று பெயர். வெயிற் காலத்தில் இந்நாட்டில் விசேஷமான மேய்ச்சல் அகப்படுகிறதினால் அநேகம் தார்த்தார்கள் தங்களது ஆட்டு மந்தைகளுடனும் மாட்டு மந்தைகளுடனும் வந்து, அவற்றை மேய்த்துக் கொண்டு பனிகாலம் வருமுன் இங்கு விட்டகலுவார்கள். இத்தேசத்திலுள்ள மலைகளில்தான் நோவாவின் கப்பல் தங்கி யிருந்தது.

இத்தேசத்தின் கிழக்கெல்லையில், மொஸல், மெரிடின் மாகாணங்களும் வடக்கெல்லையில் ஜார்ஜானியாவு மிருக்கின்றன. இந்த ஜார்ஜானியாவின் எல்லையில் ஒரு சுனையிலிருந்து எண்ணெயைப்போன்ற ஒரு திராவகம் வெளிப்பட்டு வருகிறது. அது, போஜன பதார்த்தங்களில் கலக்கத் தகுதியற்றதென்றாலும் விளக்கெரிப்பதற்கும் சாமான்களை விளக்குவதற்கும் உபயோகிக்கலாம். அது இடைவிடாமலும் தாராளமாகவும் வெளி வருவதினால் ஒட்டகைகளின் மேலேற்றி வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்த ஜார்ஜானியாவில் டேவிட் மாலிக் அல்லது டேவிட் ராஜாவென்ற ஒரு அரசனிருக்கிறான். இந்நாட்டில் ஒரு பாகத்தார் இவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றனர். தார்த்தார்களது அரசனுக்குக் கப்பம் கட்டுகின்றனர். இந்நாட்டுக் காட்டிலெல்லாம் பெட்டி மரந்தான் விளைகிறது. இத்தேசம் கருங்கடலிலிருந்து கஸ்பியன் கடல் வரையிலும் பரந்திருக்கின்றது. இக்கஸ்பியன் கடலின் சுற்றளவு 2800 மைல். இது வேறு சமுத்திரங்களுடன் கலவாத ஓர் ஏரியைப்போலிருக்கிறது. இதில் எண்ணிறந்த தீவுகளும் நகரங்களும் கோட்டைகளுமுள. இவற்றில் பாரஸீகம் விட்டுத் தார்த்தார்களால் துரத்தப்பட்ட ஜனங்கள் வந்து குடியேறி யிருக்கிறார்கள்.

ஜார்ஜானியாவிலுள்ள குடிகளெல்லாம் கிறிஸ்தவர்கள். அவர்களுக்கும் மற்றைய கிறிஸ்தவர்களுக்கும் ஆசாரபேதமில்லை. அவர்கள் மேனாட்டுப் பாதிரிமார்களைப்போல் தங்களது தலைமயிரைக் கத்தரித்து விடுகின்றனர். இவர்களது நகரங்கள் பல. இவர்களது நாட்டில் பட்டு விசேஷமாக உண்டாகின்றது. அதைக் கொண்டு இவர்கள் வெகு நேர்த்தியான ஆடைகள் செய்கின்றார்கள்.

மொஸல் மகாணத்தில் பல ஜாதியாரிருக்கின்றனர். அவர்களிற் சிலர் அராபியர், சிலர் மஹம்மதியர், சிலர் கிறிஸ்தவர், சிலர் நெஸ்டோரியர், சிலர் ஜேக்கோபைட்கள். இன்னுஞ் சிலர் ஆர்மீனியர்கள். இவர்களெல்லாருக்கும் ஜாக்கோலெட் என்ற ஒருவரே குருவாயிருக்கிறார். இவர் பெரிய ஆசாரியர்களையும் சாதாரண ஆசாரியர்களையும் ஸ்தானீகர்களையும் நியமிக்கும் அதிகாரமுள்ளவர். அவ்வாறு இவரிடம் அதிகாரம் பெற்றவர்கள், இந்தியாவின் சகலப் பிரதேசங்களுக்கும், கெயிரோ, பாக்தாது முதலிய இடங்களுக்கும், மற்றும் கிறிஸ்தவர்கள் வாசமாயிருக்கும் வேறிடங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர். ரோமாபுரியிலிருக்கும் போப் செய்வதும் இவ்வளவுதான்.

மஸ்லின் என்று சொல்லப்படும் பொன்னும் பட்டும் கலந்த ஆடைகளெல்லாம் மொஸலில்தான் உண்டாக்கப்படுகின்றன.

இந்த ராஜ்யத்திலுள்ள மலைகளில் குர்டிகள் என்று சொல்லப்படும் ஜாதியார் வசிக்கின்றனர். அவர்களில் சிலர் நெஸ்டோரியர்கள், சிலர் ஜேகோபைட்டுகள், மற்றுஞ் சிலர் மஹம்மதியர்கள். அவர்கள் மிகக் கெட்டவர்கள்; வியாபாரிகளைக் கொள்ளையிட்டே ஜீவிப்பவர்கள். இம்மலைகளுக்கு சமீபத்தில் முஸ் அல்லது மிரிடிஷ் என்னும் வேறொரு மாகாணமிருக்கின்றது. அங்கு அபரிமிதமான பருத்தி விளைகிறது. அதனால் துப்பட்டிகளும் வேறு சாமான்களும் செய்யப்படுகின்றன. இன்னாட்டார் தார்தார்களது ஆளுகைக்குட்பட்டவர்கள்.

பால்டக் அல்லது பாக்தாது என்பது ஒரு பெரிய நகரம். அதில் மஹம்மதிய ஜகத் குருவான காலிப் என்பவர் வசித்து வந்தார். அவ்வூரின் நடுவில் ஒரு பெரிய நதியோடுகின்றது. அதன் வழியே கப்பலில் பிரயாணஞ் செய்தால் பதினேழு நாளில் சமுத்திரம் போய்ச் சேரலாம். வழியில் கிஸியென்ற ஒரு நகரமும் சமுத்திரத்தை யடுத்தாற்போல் பஸ்ஸோராவென்ற வேறொரு நகரமுமுண்டு. பஸ்ஸோராவில் உலகத்திலேயே சிறந்த பேரீச்சம் பழங்கள் உண்டாகின்றன. பாக்தாதில் தங்கத்தினாலும் பட்டினாலும் விசேஷமான சாமான்கள் செய்யப்படுகின்றன. பலவகையான ஜந்துக்களின் உருவங்கள் போடப்பட்ட கெட்டியும் லேசுமான பட்டாடைகள் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவ நாடுகளில ஜனங்கள் அணியும் முத்துக்கள் அனைத்தும் பாக்தாதிலிருந்தே வருகின்றன. அவ்வூரில் ஒரு வித்யாபீடமிருக்கிறது. அங்கு மஹம்மதிய தர்மம், வைத்தியம், வான சாஸ்திரம், மாந்திரீகம் ஆகிய இவைகளெல்லாம் கற்பிக்கப்படுகின்றன. அந்தப் பிரதேசங்களுக்கெல்லாம் அதுவே பிரதானமான பட்டணம்.

தார்த்தார்கள் புறநாடுகளின்மேல் படையெடுத்துச் செல்லவாரம்பித்தபொழுது அவர்களுக்கு நால்வர் அரசர்களிருந்தனர். அவர்களில் மூத்தவனாகிய மங்கு என்பவன் ஸித்தியாவில் அரசாண்டு வந்தான். இவர்களெல்லாரும் உலகத்தையே தங்களது ஆளுகைக்குள்ளாக்க வேண்டுமென்று நினைத்து நான்கு பெயர்களும் நான்கு திக்குகளுக்குச் சென்றார்கள். தெற்கு திக்குக்குச் சென்றவன உலான் என்பவன். இவன் கி.பி. 1250-ம் வருஷத்தில், லக்ஷம் குதிரைகளுடனும் பெருத்த காலாட்படையுடனும் புறப்பட்டுத் தனது சேனையின் பெரும்பாகத்தை மறைவான ஓரிடத்தில் ஒளித்து வைத்துவிட்டு புறங்கொடுத்தோடுவதாகப் பாசாங்கு செய்து, காலிப்பை வஞ்சித்து, அவனையும் அவனது பட்டணத்தையும் பிடித்தான். பின்பு, ஊரில்பிரவேசித்து, அங்கு அளவற்ற ஐசுவர்யம் சேர்த்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு, காலிப்பை வரவழைத்து, கோபத்துடன் அவனைப் பார்த்து, "இவ்வூரின் பாதுகாப்புக்கு வேண்டிய சைனியங்களை வைத்துக்கொள்ளாமல் இந்தக் கோட்டையில் நீர் பணமே குவித்து வைத்திருக்கிறீரல்லவா? உம்மை இந்தப் பணம் காப்பாற்றுமா என்று பார்க்கலாம். நீர் அன்னந் தண்ணீரன்றி இக்கோட்டையிலேயே யிருக்கத் தக்கவர்" என்று சொல்லி அக்கோட்டையிலேயே அவனை அடைத்துவிட்டான்.

இது அவன் செய்த அக்கிரமங்களைப் பொறுக்காத நமது பகவானான இயேசு கிறிஸ்துநாதர் அவனுக்கிட்ட தண்டனையேயாகும். அவன் 1225-ம் வருஷத்தில், கிறிஸ்தவர்களையெல்லாம் மஹம்மதியராக்க நினைத்து, தன் நாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள், நெஸ்டோரியர்கள், ஜேகோபைட்டுகள் ஆகிய எல்லோரையுந் தருவித்து, "உங்களுடைய வேதத்தில், கடு



கின் விதையளவேனும் ஒருவனுக்கு தெய்வ பக்தி யிருக்குமானால், அவன் "நகர்" என்றால் மலைகளும் நகரும் என்று சொல்லி யிருக்கிறது. ஆதலால், இன்று முதல் பத்து நாட்களுக்குள்ளாக, நீங்கள் அதோ காணப்படும் மலையை அது விருக்குமிடத்தை விட்டு நகர்த்த வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால், உங்கள் மதத்தில் ஒருவருக்காவது நம்பிக்கையில்லையென்று ஒப்புக்கொண்டு மகம்மதியராக வேண்டும். அதுவும் மாட்டேனென்றால், நமது கத்திக்கு இரையாகவேண்டும்" என்றான். இதைக் கேட்ட கிறிஸ்தவர் முதலானவர்கள் எட்டு நாள் இடைவிடாமல் கடவுளைத் தியானித்தனர். அப்போது ஒரு புரோஹிதனுக்கு ஆவேசம் வந்து, "இந்தக் காரியம் ஒரு சக்கிலியனால் சாத்தியமாகும்" என்று தெரிந்தது. எல்லோரும் ஏகோபித்து அந்தச் சக்கிலியனைக் கொண்டே இதைச் செய்விக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். இந்தச் சக்கிலியன் ஒருக்கால் பாத குறடு போட்டுக்கொண்டிருந்த ஒரு யௌவன ஸ்திரீயைப் பார்த்துத் தன் மனம் அவளிடஞ் சென்றதை யறிந்து, நமது தர்ம சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கும்படித் தனது வலக் கண்ணைப் பிடுங்கி யெறிந்துவிட்டவன். குறித்த தினத்தில், இவன் மற்றைய கிறிஸ்தவர்களுடன், சிலுவையை முன்னிட்டுப் பின் சென்று, தன் கைகளைத் தலைமேல் கூப்பி, "உமது பிரஜைகளைக் கருணையுடன் கடாக்ஷியும்" என்று கடவுளைத் தியானித்துப் பின், உரத்த குரலுடன், "திரிமூர்த்திகளின் மேல் ஆணையிட்டு, உன்னை இங்கு விட்டு நகரச் சொல்லுகின்றேன்; உடனே நகர்வாயாக" என்று அம்மலையை நோக்கிச் சொன்னான். அம்மலையும், ஆஹா! என்ன ஆச்சரியம்! உடனே அம்மலையும் இடம்விட்டுப் பெயர்ந்தது. இதைக் கண்ணுற்ற காலிப்பும் அவனது பதஸ்தரும் திடுக்கிட்டு நடுநடுங்கினர். அன்று முதல், இது வரை, மலைபெயர்ந்த நாளும் அதற்கு முந்திய நாள் சாயங்காலமும் அந்நாட்டில் உபவாஸ விரத தினங்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

## எட்டாம் அத்தியாயம்.

### பாரஸீக ராஜ்யம், யஸ்டி நகர், செர்மயின் நகர், காமாண்டுபட்டணம்.

ஹிர்கானியா மாகாணத்தில் டாரிஸ் என்ற ஒரு பெரிய நகர் உளது. அது மிக ஜனநெருக்கமுள்ளது. அந்நகரத்தார் கைத்தொழிலும் வியாபாரமும் செய்து ஜீவிக்கின்றனர். அவர்கள் பொன்னிலும் பட்டிலும் அனேக சாமான்கள் செய்கின்றனர். அந்நகரில் வசிக்கும் வெளிநாட்டு வியாபாரிகள் பெருத்தலாபம் சம்பாதிக்கின்றனர். உள்ளூரார் பொதுவாக எல்லாரும் ஏழைகளே. அவர்கள் நெஸ்டோரியர்கள், ஆர்மீனியர்கள், ஜேக்கோபைட்கள், ஜியார்ஜியர்கள், பாரஸீகர், மகம்மதியர்கள், ஆகிய பல ஜாதிகளுங்கலந்தவராக விருக்கின்றனர். கடைசியாகச் சொல்லப்பட்ட மகம்மதியர்கள் நம்பத்தகாத துரோகிகள்; வேறு சமயத்தாரைக் கொள்ளையிடுவதில் தோஷமில்லையென்று நினைப்பவர்கள். இவர்களைப் பார்த்து தார்த்தார்களும் அனேகர் கெட்டுப் போய் விட்டனர். கொள்ளைக்குப் போனவிடத்தில் கிறிஸ்தவர்கள் கையால் கொலையுண்டால் இவர்கள் வீரசுவர்க்கம் பெறுவார்களாம். டாரிஸ்ஸின் ஒரு கோடியில் பாரஸம் முனிவரது ஆச்ரமம் இருக்கிறது. அங்கிருக்கும் பைராகிகளெல்லாம் கார்மிலைட் பைராகிகளைப் போலிருக்கிறார்கள். இவர்கள் முஞ்சிகள் செய்து அவற்றை ஆராதித்துத் தங்களது சிநேகிதர்களுக்குக் கொடுக்கிறார்கள். அந்தச் சிநேகிதர்கள் அவற்றை மிகவும் சிறந்தவையெனக் கொண்டாடுகின்றனர்.

டாரிஸ்லிலிருந்து பாரஸீகத்திற்கு பன்னிரண்டுநாட் பயணமுண்டு. பாரஸீகத்தில் எட்டு ராஜ்யங்களிருக்கின்றன. அவற்றுள் முதலாவது காஸ்பியன், இரண்டாவது குர்டிஸ்தானம், மூன்றாவது லார், நான்காவது ஸுலிஸ்தான், ஐந்தாவது இஸ்பஹான், ஆறாவது ஷைராஸ், ஏழாவது ஸுங்கரா, எட்டாவது டிமோகயம். கடைசியாகச் சொல்லப்பட்டது வடபாகத்தில் ஆர்பர் ஸெக்கோவின் சமீபத்திலிருக்கிறது.

பாரஸீகத்திலுள்ள குதிரைகள் வெகு நேர்த்தியானவை. அவையெல்லாம் இந்தியாவில் விற்கப்படுகின்றன. அங்கு மிகச் சிறந்த கழுதைகளுமுண்டு; அவை கொஞ்சந் தீனி தின்று பெருத்த மூட்டைகளை வெகு தூரஞ் சுமந்து செல்லுஞ் சக்தியுடையன வாதலால் அவை குதிரைகளை விட விலை யுயர்ந்தவை. அத்தேசத்தில் ஒட்டகைகளு மிருக்கின்றன. ஆனால் அவைகளுக்குக் கழுதை யளவுகூட வேகமாகப் போகும் சக்தியில்லை; ஓரொரு சமயங்களில் இத்தேசத்தில் வெகுதூரம் புல்லுங்கூடக் கிடைப்பதில்லை யாதலால் இம்மிருகங்கள் அத்தேசத்தில் பிரயாணஞ் செய்வோருக்கு அவசியமாயிருக்கின்றன. இத்தேசத்திலுள்ள ஜனங்கள் மிகக் கெட்டவர்கள்; துராசைபிடித்தவர்கள்; கொலை பாதகர்கள்; மகம்மதிய மதத்தினர். ஒண்டியாகப் போகும் வியாபாரிகளை இவர்கள் எங்கே கண்டாலும் கொள்ளையடித்துக் கொன்று விடுகிறார்கள்.

இத்தேசத்திலுள்ள பட்டணங்களில் பொன், பட்டு முதலியவைகளில் வேலை செய்வதிலும், பூப்போடுவதிலும் தேர்ந்த தொழிலாளிகள் இருக்கின்றார்கள்.

இங்கு பட்டுப்பூச்சிகளும், கோதுமை, வாற்கோதுமை, தினை, சாமை முதலிய தானியங்களும், கணக்கில்லாத சாருயமும், பழவகைகளும் ஏராளமாக உண்டாகின்றன. இவர்களது மதத்தில் மதுபானம் விலக்கப்பட்டிருந்தாலும், இவர்கள் "சாறுபக்ஷைக் காய்ச்சிவிட்டால் அதன் ருசி மாறி விடுகிறது. அத்துடன் அதன் பெயரும் மாறிவிடுகிறதாதலினால் அதைச் சுடச்சுடக் குடிப்பதில் தோஷமில்லை" யென்று சொல்லி, வேத வாக்கியத்திற்கு அர்த்தமோ அனர்த்தமோ செய்கின்றார்கள்! யஸ்டியென்பது பாரஸீக தேசத்தின் எல்லையிலுள்ள ஒரு விசேஷமான வியாபாரஸ்தலம். அவ்வூரில் பட்டு சாமான்களில் கைத்தொழில் விசேஷமாகச் செய்யப்படுகிறது.

பாரஸீகத்தின் கிழக்கெல்லையில் ஒரு மூலையில் ஜாமான் என்ற ஒரு ராஜ்யமிருக்கிறது. இது தார்த்தார்களுக்குக் கீழ்ப்பட்டது. இந்த ராஜ்யத்திலுள்ள மலைகளின் வெடிப்புகளில் டர்க்காய்ஸ் என்று சொல்லப்படும் துருக்கி வைரங்களும் வேறு இரத்தினங்களும் அகப்படுகின்றன. இந்த ராஜ்யத்தில் யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களும் மருந்து வகையராக்களும் செய்யப்படுகின்றன. ஸ்திரீகள் பட்டு வஸ்திரங்களில் எல்லாவிதமான ஜந்துக்களின் உருவங்களையும் அதியற்புதமாக ஊசிகொண்டு போடுவதில் மிகச் சமர்த்தர்கள். இங்குள்ள வல்லூறுகள் உலகத்திலுள்ள மற்றவைகளைக் காட்டிலும் மிகச் சிறந்தவை. இவை மற்றைய தேச பறவைகளைப்போல் நெடுநாள் பழக்கமின்றியே வெகு வேகமாகப் பறக்கக்கூடியவை. இவற்றின் உடம்பு சிவந்திருக்கும்.

இத்தேசத்திற்கப்பால் ஒரு பெரிய மைதானம் உண்டு. அதைக் கடக்க எட்டு நாட் செல்லும். அதற்கப்புறம் ஒரு பள்ளத்தாக்கு தென்படும். மேற் சொல்லிய மைதானத்தில் ஆரண்யங்களும் நகரங்களும் இருக்கின்றன. பள்ளத்தில பழந்தரு மரங்கள்தானுண்டு. அங்கு ஆட்டிடையர் சாலைகளைத்தவிர வேறு



வீடு வாசல்கள் ஒன்றுமே யில்லை. பனிகாலத்தில் இந்தப் பிரதேசம் வெகு குளிராயிருக்கும். குளிர் பொறுக்கவே முடியாது.

இதைவிட்டு முன் சென்றால், இன்னும் ஒரு விசாலமான சமவெளி தென்படும். அங்கு காமாண்டு என்ற ஒரு பட்டணம் இருக்கிறது. அது கொஞ்சகாலத்திற்கு முன்வரையிலும் பெரியதாகவும் ஜன ஸமிருத்தியுள்ளதாகவுமிருந்தது. இப்பால் தார்த்தார்கள் அதையழித்துவிட்டனர். இப்போது அப்பிரதேசத்திற்கு ரியோபர்ல் என்று பெயர். அங்கு மாதுளம் பழங்களும், சீமை மாதுளைகளும், கோவைப்பழங்களும் இதர பழங்களும் உண்டாகின்றன. இப்பழங்கள் நமது சீத தேசங்களில் உண்டாவதில்லை. இத்தேசத்தில் பெருத்த காளைகளுண்டு. அவைகள் வெள்ளை நிறமும் மெல்லிய ரோமமும், கெட்டியும் மொண்ணையுமான சிறு கொம்புகளுமுடையன. பெருத்த சுமைகளைத் தூக்கிச் செல்லப் பழக்கப் பட்டவை யாதலால் இவைகளின் முதுகெல்லாம் ஒட்டக முதுகைப்போல் வளைந்திருக்கின்றன. தவிர, பொதிமெத்தைகளை அவற்றின் முதுகின் மேல் வைக்கையில், ஒட்டகங்களைப்போலவே அவைகள் தங்களது முழங்கால்களை வளைத்துக்கொள்ளவும் மூட்டைகள் ஏறிய பின்னர் மேலெழவும் பழக்கப் பட்டிருக்கின்றன.

இந்நாட்டு ஆடுகள் நமது தேசக் கழுதைகள் அளவு பெருமனுள்ளவை. அவற்றின் வால்கள் மிகப் பெரிதும் அகலமுமாக முப்பது ராத்தல் கனமுள்ளன. அவைகள் வெகு லக்ஷணமாகவும் பெருத்துமிருக்கின்றன. அவைகளின் மாமிசம் வெகு ருசி. இத்தேசத்திலுள்ள சமவெளியில் அனேகம் பட்டணங்களும் நகரங்களும் இருக்கின்றன. கரையான்கள் என்று சொல்லப்படும் மெஸ்டிஸோக்கள் இவ்வூர்களைத் தாக்காமலிருக்கும்படி ஒவ்வொரு ஊரைச் சுற்றிலும் உயர்ந்த மண் சுவர்கள் எழுப்பி யிருக்கிறார்கள். இந்த மெஸ்டிஸோக்கள் யாரென்றால் இந்திய ஸ்திரீகளிடம் தார்த்தார்களுக்குப் பிறந்த ஒரு கலப்பான ஜாதியார். இவர்களுக்குத் தலைவன் துருக்கிஸ்தானத்தை முன்பு ஆண்டுவந்த ஜகத்தாய் என்பவனுடைய மருமகனான நுகோடார் என்பவன். அவன் கீழ் பதினாயிரம் பேரிருக்கின்றார்கள். இந்த நுகோடார் என்பவன் மலையாள ராஜ்யம் அவிடன் ஸுல்தானுக்குக் கீழ்ப்பட்டிருப்பதைக் கேட்டுத் தனது மாமனுக்குத் தெரியாமல் படையெடுத்துச் சென்று டில்லி முதலிய நகரங்களைப் பிடித்து, ஒரு புதிய ராஜ்யத்தை ஸ்தாபித்து, இந்திய ஸ்திரீகளுடன் கலந்து, இந்த கரையான் என்னும் ஜாதியாரை உண்டாக்கினான். இவர்கள் ரியோபர்லுக்கும் வேறு நாடுகளுக்குஞ் சென்று கொள்ளை யடித்து அவைகளை அழிப்பதே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இச்சமவெளி தென் பாகத்தில் அகன்று ஐந்து நாட் பயணமுள்ளதாக விருக்கிறது. அது கடைசியாக இருபது மைல் தூரத்துக்குக் கொஞ்சங் கொஞ்சமாகச் சரிந்து வழியும் நேரில்லாமல் திருடர்களது தொந்தரவுக்கும் உட்பட்டிருக்கிறது.

கடைசியாக, மிகவும் நல்ல பிரதேசங்கள் கண்ணுக்குத் தென்படுகின்றன. அவைகளை இரண்டு நாளில் கடக்கலாம். அவைகளுக்கு ஆர்மஸ் என்று பெயர். இங்கு நதிகளும் பனைமரங்களும் விசேஷமாக விருக்கின்றன. விதம் விதமான கோழிகளும் ஏராளமாகவுண்டு. கோழிகளில் கிளியினத்தைச் சேர்ந்தவைகளே எண்ணிறந்தவை. அவைகளுக்கும் நமது நாட்டிலுள்ள கோழிகளுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. இங்கிருந்து கடலோரம் வந்தால்

ஆர்மஸ் தீவு தென்படும். இத்தீவுக்கு வாஸனைத் திரவியங்களும், முத்துக்களும், நவரத்தினங்களும், பொன் வேலை வெள்ளிவேலைகளுடன்கூடின ஜவுளிகளும், யானைப் பல்லும், மற்றும் இந்தியாவிலுள்ள விலை யுயர்ந்த வேறு சாமான்களுங் கொண்டு அநேக வியாபாரிகள் வருகிறார்கள். ஆர்மஸ் ஒரு பெருத்த வியாபாரஸ்தலம்; அதற்குக் கீழ்ப்பட்டு அநேகம் நகரங்களும் கோட்டைகளும் உள. அதுவே சேர்மயின் என்னும் ராஜ்யத்திற்குத் தலை நகர். அவ்வூர் அரசனுக்கு ரஷினட்பின் அக்கோமாக் என்று பெயர். அவன் சேர்மயின் அரசனுக்குக் கீழ்ப்படிந்தவன்; அவனது ராஜ்யத்தில் இறந்துபோகும் வியாபாரிகளது ஆஸ்தியெல்லாம் அவனுக்கே சேருகின்றது. கோடைகாலத்தில் இந்நாட்டார் தங்களது வீடுகளை விட்டுவிட்டு நீர் நிலைகளின் மத்தியில் கட்டப்பட்டிருக்கும் கோடைகால வாஸங்களுக்குச் செல்லுகின்றனர். அக்காலத்தில், காலை ஒன்பது மணியிலிருந்து உச்சிவரைக்கும், அத்யுஷ்ணமான ஒரு காற்று மணலிலிருந்து வீசி மனிதர்களது மூச்சை யடைத்து விடுகின்றது. அதற்காக இவர்கள் நீரினுள்ளேயே கிடக்கின்றனர்.

ஒருகால், சேர்மயின் தேசத்தரசன் ஆர்மஸ் தேசத்தரசனிடமிருந்து, தனக்கு வரவேண்டிய கப்பத்தை வசூல் செய்து வரும்படி ஆயிரத்தறுநூறு குதிரைகளும், ஐயாயிரம் காலாட்களும் நிறைந்த ஒரு படையை ஆர்மஸுக்கு அனுப்பினான். அவர்கள் இந்நாடு வந்து சேர்ந்து, உஷ்ணத்தைக் கண்டு, இன்னது செய்வதென்று தெரியாமல், மூச்சடைபட்டிறந்தனர்! இந்நாட்டார் தானியங்களாலாவது, மீனினாலாவது செய்யப்படும் ரொட்டியைப் புசிப்பதில்லை. அவர்களுக்குப் பேரீச்சம் பழம், உப்பிட்ட மீன், வெங்காயம் ஆகிய இவைகளே ஆகாரம் அவர்களிடம் அதிகமாகப் பெருத்த கப்பல்கள் கிடையாது. அத்தேசத்து மரம், இலகுவில் உடைந்தும் வெடித்தும் போவதும், ஒன்றுடன் ஒன்று இணைத்து இரும்பாணி யிட்டு இசைக்க முடியாதிருப்பதுமே இதற்குக் காரணம். இந்நாட்டுக் கப்பல்களிலுள்ள மரங்களெல்லாம் மர ஆப்பினாலும், இந்தியாவிலுண்டாகும் தேங்காயினின்று செய்யப்படும் ஒருவிதக் கயிற்றினாலும் பிணிக்கப்படுகின்றன. தோல் பதனிடப்படுவதுபோல், பதனிடப்பட்ட பின், இத்தேங்காய்களை மூடிக்கொண்டிருக்கும் கதம்பைகள் வெட்டி யெடுக்கப்பட்டுப் பின் மிகப் பலமான கயிறுகளாகத் திரிக்கப்படுகின்றன. இக்கயிறுகள் சமுத்திர அலைகளின் வேகத்தையும் கொடுமையையும் தாங்கக் கூடியவை. அவற்றால்இலகுவில் அறுபடாதனவுமாம். அக்கப்பல்களுக்குப் பாய்மரமும் ஒன்றே, பாயும் ஒன்றே, கொடியும் ஒன்றே, மேற் தட்டும் ஒன்றே. அவைகளுக்குள் தண்ணீர் புகாமலிருப்பதற்காக மீன் எண்ணெயையும் கொழுப்பையும் பூசுகின்றார்களேயன்றி கீல் பூசுவதில்லை. குதிரைகளும், வேறு சரக்குகளுங் கொண்டு கடல் வழியாக இந்தியாவுக்குச் செல்லுகையில், இவர்களுக்கு இக்கப்பல்களில் அநேக நஷ்டமாகி விடுகின்றன. இதற்குக் காரணம் இந்து சமுத்திரம் புயல் காற்றும் கொந்தளிப்பும் நிறைந்திருப்பதும், இவர்களது கப்பல்கள் இரும்பினால் கட்டப்படாதிப்பதுமே.

இந்நாட்டார் கன்னங்கறேலென்றிருக்கின்றனர்; மகம்மதிய மதத்தினர். குடும்பத் தலைவன் ஒருவன் இறந்துபோய்விட்டால், அவனது விதந்து, இந்நாட்டு வழக்கப்படி, நான்கு வருஷகாலம் தினந்தோறும் துக்கம் கொண்டாடுவாள். இந்நாட்டில் "கூலிக்கு மாரடிக்கும்" ஸ்திரீகளும் இருக்கின்றனர்,



அவர்களுக்கு அதுவே ஜீவனம். ஆர்மஸ்விலிருந்து சேர்மெயினுக்குத் திரும்பி வந்தால் ஒரு செழிப்பான சமவெளி தென்படும். அங்கு செய்யப்படும் ரொட்டியை அந்நாட்டார்தான் சாப்பிடவேண்டும்; வேறொருவரும் சாப்பிடமாட்டார்கள். அதில் உப்புத் தண்ணீர் கலப்பதினால் அது வெகு கசப்பாகிவிடுகிறது.

அங்கு மிகச் சிறந்த குண்டங்களிருக்கின்றன. அவைகளால் பல பிணிகள் குணப்படுகின்றன.

## ஒன்பதாம் அத்தியாயம்.

### ஒரு பாலைவனம், கோபின்ஹம், பின்னுமொரு பாலைவனம், டிமோகயம்.

சேர்மயினிலிருந்து மூன்று நாள் குதிரையின் மேலேறிச் சவாரி சென்றால் ஒரு பாலைவனம் வந்து சேரலாம். அந்தப் பாலைவனம் கோபின்ஹம் வரையில் செல்கின்றது. அதைக் கடக்க ஏழுநாட் செல்லும். முதல் மூன்று நாட்களில் தண்ணீர்கூடக் கண்ணுக்குத் தென்படாது; சில குட்டைகள் தென்படினும், அவற்றின் ஜலம் மூலிகைகளின் சாற்றைப்போல் பச்சை நிறமுள்ளதும், உவர்ப்பும் கசப்புமாகவுமிருக்கும். அந்த ஜலத்தை எவராயினும் கொஞ்சமேனும் அருந்திவிட்டால் உடனே அவருக்குப் பேதியாவது நிச்சயம். இந்த ஜலத்திலிருந்து காய்ச்சி யெடுக்கப்படும் உப்பைத் தின்றாலும் இந்த அவஸ்தைதான். ஆதலால் இப்பிரதேசத்தில் யாத்திரை செய்பவர் தாகசாந்தி செய்துகொள்வதற்காகத் தங்கள் கையில் கொஞ்சம் ஜலம் கொண்டுபோகவேண்டுவது அவசியம். இந்த ஜலத்தைக் குடிக்கும் மிருகங்களுக்குங்கூட இதே கதிதான். அவைகளுக்கும் பேதியாகாமலிருப்பதில்லை. நாலாம் நாள் பூமிக்குள்ளோடும் ஒரு நன்னீர் நிறைந்த நதி காணப்படும் மீந்த மூன்று நாட்களின் அவஸ்தைகளும் முதன் மூன்று நாட்களைப் போலத்தான்.

கோபின்ஹம் ஒரு பெரிய பட்டணம். அங்குள்ள ஜனங்கள் மகம்மதியர்கள். அங்கு உருக்கி வார்த்த இரும்பினால் பெரிய கண்ணாடிகள் செய்யப்படுகின்றன.

கண்ணைக் குளிர்விக்கும் 'துட்டியாவும்,' 'ஸ்போடியோ' வும் பின் வருமாறு செய்யப்படுகின்றன. இந்நாட்டுச் சுரங்கங்களிலுள்ள மண்ணையெடுத்து வந்து ஒரு கொப்பரையிலிட்டுக் காய்ச்சுவார்கள். அப்போது அதினின்றெழும் நீராவியை ஒரு இருப்புக்குழாயிற் பாய்ச்ச அது குளிர்ந்து இருக்கின்றது. இவ்வாறு இருகின பசைக்குத் துட்டியாவென்றும், கொப்பரையில் மீந்திருக்கும் கசண்டுக்கு ஸ்போடியோவென்றும் பெயர்.

கோபின்ஹம் விட்டு முன் சென்றால் பின்னுமொரு பாலைவனம் காணும். அது எட்டு நாட் பயணமுள்ள வெறும் பொட்டலான மணற்காடு. அங்கு மரமா, காயா, குடிக்கத் தண்ணீரா ஒன்றுங் கிடையாது. எட்டிக் கசப்பான ஜலம் மாத்திரம் ஆங்காங்கு காணப்படும். அந்த ஜலத்தை மிருகங்களுங்கூடத் தீனியுடனன்றித் தனியே குடிப்பதில்லை. ஆதலால் பிரயாணிகள் குடிக்கத் தண்ணீர் தங்களது கையிலேயே கொண்டு செல்கின்றனர்.

இந்தப் பாலைவனத்தைத் தாண்டிய பின், அனேகம் பட்டணங்களும் பலமான கோட்டைகளும் நிறைந்த "டிமோகயம்" வந்து சேர்வோம். அது பாரஸீகத்தின் வடகோடியிலுள்ள ஒரு நாடு. அங்குள்ள ஒரு பெரிய மைதானத்தில் மகத்தான ஒரு மரம் இருக்கின்றது. அதற்குச் சூரிய விருக்ஷமென்று பெயர். கிறிஸ்தவர்கள் அதை வரட்டு மரமென்று சொல்லுகிறார்கள். அந்த மரம் மிகப் பெருமனுனது. அதன் இலைகள் ஒரு புறம்

வெள்ளை நிறமாகவும் மறுபுறம் நீல நிறமாகவுமிருக்கும். அதில் "செஸ்ட்நட்" டைப் போன்ற முள்ளுள்ள சொரசொரப்பான சொப்புகள் உண்டாகின்றன. சொப்புகளுக்குள் ஒன்றும் இருப்பதில்லை. அது பெட்டி மரத்தைப் போல் மஞ்சள் நிறமாகவும், கெட்டியாகவும், பலமுள்ளதாகவுமிருக்கிறது. இங்கு நூறு மைல் தூரத்துக்கு ஒரே சரகில் மாத்திரம் பல மைல்களுக்கிடையில் சில மரங்களைக் காணலாம்; மறு சரகில் ஒரு மரமாவது கிடையாது.

இங்கு மஹா அலெக்சாண்டர் டோயஸ்ஸுடன் யுத்தம் செய்ததாக இன்னாட்டார் சொல்கின்றனர்.

இன்னாட்டுப் பட்டணங்களில் நல்ல சாக்குகள் ஏராளமாக நிறைந்திருக்கின்றன.

காற்று சமசீதோஷ்ணமானதாகவிருக்கிறது. ஜனங்களும் அதிசுந்தரமானவர்கள். விசேஷமாக இன்னாட்டு ஸ்திரீகளே உலகத்திலுள்ள ஸ்திரீளெல்லாரிலும் அழகிற் சிறந்தவர்கள்.

(தொடரும்.)

# வங்காளமும் அதன் எழுச்சியும்.

S. R. வேங்கடரமணய்யர், B.A.

ஆரியவர்த்தம் என்றும், பரதக் கண்டம் என்றும் அழைக்கப்படும் இப்புண்ணிய பூமியாகிய இந்திய நாடு பண்டைக்காலம் முதல் நாகரிகத்திற்கும், செல்வத்திற்கும், அறிவுக்கும் ஒப்புயர்வற்றதாய் விளங்கி வருகிறது என்பது யாவரும் நன்கறிந்த விஷயம். தற்காலத்தில் நம்மிந்திய நாட்டில் கவனம் அதிகமாய் ராஜீய விஷயங்களில் செலுத்தப்படினும், மற்றைத் துறைகளிலும் தெரிந்தும் தெரியாமலும் கணக்கற்ற பாரத புத்திர ரத்தினங்கள் உழைத்து வருகின்றனர்.

இங்ஙனம் நம் தேசத்தின் மேன்மையைக் கருதிப் பல துறைகளிலும் ஊக்கத்துடன் உழைத்து வருபவர்களில் முதன்மையானவர் வங்காளிகள் என்றே சொல்லலாம். அவர்களது தேச பக்தியும், விடா முயற்சியும், தீர்க்க தரிசனமும், தியாக புத்தியும், புத்தி நுட்பமும் மற்றைய மாகாணத்தாரிடத்தில் காண்பதரிது. மற்றைய மாகாணத்தாரை இகழ்ந்துரைப்பதாக எண்ணக்கூடாது. மற்றைய மாகாணத்தாருக்கு இன்னும் தேசத்தின் முன்னேற்றத்தைப் பல விதங்களிலும் விருத்தி செய்ய ஓர் உணர்ச்சியும் ஆவலும் ஏற்படாததேதான் காரணமே ஒழிய அவர்களிடத்து அந்தத் தியாக புத்தியும், புத்தி நுட்பமும், விடா முயற்சியும் போன்ற மற்றைய அம்சங்களின் குறைவினால் அன்று. வங்காளத்தில் பல துறைகளிலும் ஊக்கத்துடன் உழைத்து வருபவர்களின் எண்ணிக்கையை மற்றைய மாகாணத்தின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பின் இவ்வித்தியாசம் நன்கு புலப்படும் என்பது திண்ணம்.

உதாரணமாக, நம் மத விஷயத்தைப்பற்றி எடுத்துப் பேசுவோம். நம்முடைய ஹிந்து மத தர்மத்தை நாட்டவும், அதனுட் புகுந்திருந்த மாசை அப்புறப்படுத்தித் துலக்கி, ஹிந்து மதத்திற்குப் புத்துயிரளித்த மகான்கள் அநேகர் வங்காளிகளேதான். இவ்விஷயத்தின் முதன் முதல் உழைத்தவர் ஸ்ரீமான் ராஜாராம் மோஹன்ராய் என்பவரே. இந்தியத் தேசிய வாழ்விற்குப் பல விதத்திலும் அடிகோலினவர் அவர் என்றே சொல்லலாகும். அன்னாரின் ஜீவிய சரிதம் நமக்குப் பல விதத்திலும் புத்திமதிகளைப் புகட்டக்கூடியதாயிருக்கிறது. பெண் கல்வி, விதவா புனர் விவாகம், உடன் கட்டையேறுவதை நிறுத்தல், ஜாதி பேதத்தை ஒழித்தல்போன்ற விஷயங்களில் அதிக சிரத்தையுடன் உழைத்து வந்தவர். இவர்தான் ஹிந்துமதச் சீர்திருத்தத்தை முதன்முதல் துடங்கினவர். ப்ரம்ம சமாஜம் என்ற ஒரு புதிய சீர்திருத்தமடைந்த மதத்தை ஸ்தாபித்தவர் இவரே. இப்புதிய மதத்தின் பிரகாரம், விக்கிரக ஆராதனை, ஜாதி வித்தியாசம், குழந்தைக் கலியாணம் முதலிய யாவும் தள்ளப்பட்டன. இவருக்குப் பின் வந்த கேசவ சந்திர சென் என்பவர் ராம்மோகன் ராய் ஸ்தாபித்த மதத்தை மேலும் பரவச் செய்ய உழைத்து வந்தார். இவ்விஷயத்தில் மற்றும் சிலர் உழைத்து வந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் மகரிஷி தேவேந்திர நாத் டாகூரும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும், விவேகானந்தருமே யாவர். மகரிஷி தேவேந்திர நாத் டாகூர் என்பவர் முதலில் ப்ரம்ம சமாஜத்தில் சேர்ந்திருந்து சில அபிப்பிராய பேதங்களினால் அதினின்றும் பிரிந்து தாம் வேறு விதக் கொள்கைகளுடன் ஒரு சமாஜத்தை ஸ்தாபித்தார். கடைசியாக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும் ஹிந்து மதத்திற்கு ஒரு புதிய ஆகர்சத்தையும் உயிரையும் கொடுத்தார். இவர் தக்ஷிணேசுவரம் என்றவிடத்தில் ஒரு கோவிலுக்கு அர்ச்சகராயிருந்தார். அவருக்கு எழுத்து வாசனை என்பது கொஞ்சமும் கிடையாது. கோவிலுக்கு வரும் யாத்திரிகர்களுடனும் யோகிகளுடனும் சாதுக்களுடனும் பழகி பக்தியில் மூழ்கித் தன்னை மறந்து சுவாமியைத் தியானிப்பார். இதனால் இவருக்கு மெஞ்ஞான போதம் உண்டாகி உலகப் பற்றற்று சதா வேதாந்த விஷய விசாரத்திலும் உபதேசத்திலும் தனது காலத்தைக் கழித்தார். பிறகு தன் பிரதம சிஷ்யரான விவேகானந்த ஸ்வாமிகளின் மூலியமாய் இந்து மதத்தின் சிரேஷ்டத்தையும் கொள்கைகளையும்பற்றி உலகம் முழுதும் பிரசிக்கப்படுத்தினர். விவேகானந்த ஸ்வாமிகளும் பிரபஞ்சம் முழுதும் கேசாடனம் செய்து அங்கங்கே சொற்பொழிவுகள் நிகழ்த்தி இந்துமத உண்மைகளை எடுத்துரைத்து வந்தார். மேற்கூறிய எல்லாரும் வங்காளிகள்தான் தற்காலத்தில் அவர்கள் கீர்த்தி நம் நாடெங்கும் விளங்குவது யாவரும் அறிவர்.

வங்காளியிலும், ஆங்கிலத்திலும் இலக்கியங்களில் பிரக்கியாதிபெற்று விளங்குபவர் அநேகர் உளர். மைக்கேல் மதுசூதன தத்தும், தோருதத்தும், ராமேச்சந்திரதத்தும் அவரவர் காலங்களில் மேனாட்டாரைத் தங்களது கவிதா சக்தியால் பிரமிக்கச் செய்தனர். தற்காலத்திலும் அத்தகைய கவிவாணர்களுக்குப் பஞ்சமில்லை. கவிச்சக்கரவர்த்தி என்று சொல்லப்படும் ரவீந்திரநாத் டாகூரை அறியாத நாடும் ஊரும் இல்லை. இவர் கவிதாசக்தியை வியந்தே, இவருக்கு நோபல் (Nohel) என்பவர் ஸ்தாபித்த நிதியிலிருந்து 8000 பவுன் பரிசளிக்கப்பட்டதென்றால் டாகூரின் கவிவன்மையைப்பற்றி எழுதுவது இங்கே அசாத்தியம். மற்றும் இராஜீய விஷயங்களில் மிக்க ஊக்கத்துடன் உழைத்து வரும் ஸ்திரீ இரத்னமாகிய ஸ்ரீமதி சரோஜினி தேவியும் ஒரு இனிய கவி வனிதையாவள். இம்மாதின் கவிகள் யாவும் நமக்கு மனத்திற்கு இன்பமளித்து உற்சாகத்தைக் கொடுப்பதுடன் அம்மாதின் கவித் திறமை இத்தன்மையது என்பதையும் நன்கு விளக்குகின்றன. சிறிய காவியங்களில் தான் கண்ட விஷயங்களை வருணிப்பதில் (Lyric Poetry) மிகவும் சாமர்த்தியம் வாய்ந்த பெண்மணி. ஆகவே இம்மாதின் காவியங்களின் நடைச் சுவையையும் பொருட் சுவையையும் அவைகளைப் படித்தவர் ஒருவரும் மறவார். இப்பெண்மணியின் தம்பியான ஹரிந்திரநாத்சட்-

டோபாத்யாயா என்பவரும், தனது கவித்திறத்தைப் பல சிறிய காவியங்களில் காட்டியுள்ளார். அவருக்கு இன்னும் வயது முப்பது ஆகாவிடினும், அவரது காவியங்களைப்பற்றி ஆங்கில பண்டிதர்கள் அநேகர் புகழ்ந்திருக்கின்றார்களெனில் யாம் அவற்றைப்பற்றிக் கூறுவது மிகையாகும். நம்மிந்திய நாட்டில் ஆங்கில பாஷையில் மேற்கூறியவர்களைவிட சிரேஷ்டமான கவிகளை நாம் அறிந்திலோம்.

நவீனக் கட்டுரைகள் எழுதுவதில் மிகவும் பிரக்யாதி பெற்றவர், வங்காளி பாஷையில் அநேகம் நாவல்கள் எழுதியுள்ளவர் பங்கிம் சந்திர சாடர்ஜியாவர். இவர் எழுதிய நாவல்கள் யாவும் தேச பக்தியைப் புகட்டக்கூடியவை. எல்லாம் நமது தேச சரித்திர சம்பந்தமானவை. இவரை வங்காள ஸர்வால்டர் ஸ்காட் என்று சொல்லுகிறார்கள். அதே துறையில் அநேக நாவல்கள் எழுதியவர் கவி சக்ரவர்த்தியான டாகூராவர். அவரைப்பற்றிக் கூறுவது என்றால் நமது வியாசம் பெருகும்; இடமுந் தராது. அம்மாதிரியே அவரது சகோதரியான ஸ்ரீமதி சுவர்ண குமாரி தேவியும், (Mrs. Goshal) சிறிய கதைகள் எழுதுவதில் மிகக் கியாதி பெற்றுளார்.

வித்யாபிவிருத்திக்காக உழைத்து வந்தவர்களுள்ளும் அநேகம்வங்காளிகள் உளர். தற்காலத்திய ஆங்கிலக் கல்வி நமக்கு ஏற்றதல்லவென்றும் அக்கல்வித் திட்டத்தில் நமது தேசத்தின் பரம்பரையையும், நாகரிகத்தையும் நன்கு அறியவும் மேனாட்டாரின் நூதன பரிசோதனைகளை நமது நாட்டின் தன்மைக்கேற்றவாறு அமைத்துக் கொள்ளவும் ஏற்ற திறமையுடன் கைத்தொழில்களைக் கற்கவும் போதுமான சௌகரியங்களில்லாமையை உணர்ந்த ஒரு சிலர் அதற்குப் பரிகாரம் தேடினர். அவர்களில் அநேகர் வங்காளிகளே. மாணவர்களுக்குக் கல்வி கற்க ஏற்ற வசதிகளையும் மேனாட்டிற்குச் சென்று பூர்ண வித்தையை யடைவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய பல தனவான்கள் லக்ஷக் கணக்கில் கல்கத்தா சர்வ கலாசாலைக்குப் பணத்தைக் கொடுத்திருக்கின்றனர். அவர்களில் மிகப் பிரசித்தி பெற்றவர்கள் ஸர் தாரக நாத் பாலிட் என்பவரும், ஸர் ராஷ் பிகாரி கோஷ் என்பவருமே யாவர். பாலித் என்பவர் பேரினால் ஒரு பெரிய பௌதிக கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தலைமைவகிப்பவர் ஆசார்யரான ஸர் பி.ஸி. ரேய்யாவர். அம்மாதிரியே ஸர் ராஷ்பிகாரி கோஷின் பேரினால் ஒரு நிதி ஏற்படுத்தி அதன் வட்டியைக் கொண்டு மிகவும் கியாதிபெற்ற பௌதிக சாஸ்திர நிபுணர்களை மேனாட்டாரின் முறைகளைக் கற்கவென்று அயல் நாடுகளுக்கு அனுப்புகின்றனர். மேலும் இந்திய சாஸ்திர நிபுணர்கள் தாங்கள் புதிதாகக் கண்டுபிடித்த முறைகளை மேனாட்டு மேதாவிகளுக்கு மெய்ப்பிக்கவும் அனுப்பப்படுகின்றனர். இதனால் நம்மிந்தியர்களுக்கு இதுகாள்வரையிருந்து வந்த அசௌகரியங்கள் யாவும் குறைந்து வருகின்றன. சாந்திநிகேதனில் ரவீந்திர நாத டாகூர் நமது ஹிந்து தர்மத்திற்கும் நாகரிகத்திற்கும் ஏற்றவாறு ஒரு குருகுலத்தை ஸ்தாபித்து, அவ்விடத்தில் மாநிழலில், முன்னாளில் ரிஷிகள் ஆசிரமத்தில் சிஷ்யர்களுக்குப் போதித்ததுபோல் கல்வி போதித்து வருகின்றனர். இதன் நிமித்தமாக தனது சொத்து முழுதையும் அதற்கென்றே அர்ப்பணம் செய்திருக்கிறார். சமீபத்தில் காலஞ் சென்ற ஸர் அசுடோஷ் முகர்ஜியும் வங்காளிகளின் வித்யாபிவிருத்தியைக் கோரி அவர் கல்கத்தா ஸர்வ கலாசாலையில் ஏற்படுத்தியுள்ள சௌகரியங்கள் யாவும் மிகவும் பாராட்டத் தக்கவை. 1905-ம் வருஷம் சுதேசிய இயக்கத்தில் மிகவும் தீவிரமாய் உழைத்து வந்த அசுவினி



குமார தத்தரும் தனது ஆஸ்தி முழுவதையும் ஒரு கலாசாலையை ஸ்தாபிப்பதிலும் நிர்வாகிப்பதிலும் செலவிட்டுத் தானே அதன் கௌரவ ஆசிரியராகவிருந்து வந்தார் என்றால் வங்காளிகளின் தியாக புத்தியும் வித்தியாபிவிருத்திக்காக உழைக்கும் நேர்மையும் நன்கு விளங்கும்.

ராஜீப விஷயத்தில் உழைத்துவந்த ஸ்ரீமான் தாஸ—ம் தனது ஆஸ்தி முழுமையும் கல்வி விஷயத்தில் செலவிட ஏற்பாடு செய்திருப்பதாகக் கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் நாம் கேள்விப்பட்டோம்.

ஹிந்து சமூகத்தில் காலபேதங்களால் அநேகம் குறைகள் ஏற்பட்டுள்ளன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். இக்குறைகள் யாவும் தற்காலத்தில் நம்மில் சிலரின் சுயேச்சைக்கும், சௌக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தடங்கல்களாக விருக்கின்றன. இக்குறைகளை முதன் முதல் நன்கறிந்து உழைத்து வந்தவர் ராம்மோகன் ராய் என்று முன்னமேயே சொன்னோம். இவர் தன்னால் கூடியவரையில் விதவைகள் தம் கணவரோடு உடன்கட்டை ஏறுவதை நிறுத்தியும் இளம் பெண்கள் விதவைகளான பின் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்றும் வற்புறுத்தியும் வந்தார். அத்துறையில் உழைத்தவர்களில் ஈசுவர சந்திர வித்யாசாகர் என்பவரும் ஒருவர். சமீபத்தில் காலஞ் சென்ற சசிபதபானர்ஜியும் சமூக சீர்திருத்தத்தில் மிக ஊக்கத்துடன் உழைத்து வந்தார். இவர் பெண்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க மிகப் பாடுபட்டு, பள்ளிகளையும், கைம்பெண்களுக்கிருக்க விடுதிகளையும், கைத்தொழிற் சாலைகளையும் ஏற்படுத்தி அவர்களுக்கேற்ற கல்வியையும் [illegible] போதிக்கின்றனர்.

ராஜீப விஷயங்களில் வங்காளிகள் அநேகர் ஊக்கங்கொண்டு உழைத்து வருகின்றனர். ஸர் சுரேந்திரநாத்பானர்ஜி என்ன, ஆனந்த மோகன போஸ் என்ன, லால்மோகன் கோஷ் என்ன, பிபின் சந்திரபால் என்ன, தேசபந்து தாஸ் என்ன, இவர்களெல்லோரும் அவரவர்கள் காலங்களில் சிங்கக் குட்டிகள்போன்று தைரியமாய் அதிகார வர்க்கத்தினரோடு ஜனங்களின் உரிமைக்காகப் பாடுபட்டுழைத்தது யாவரும் அறிவர். அதைப்பற்றி இங்கு விவரித்தல் அனாவசியம்.

ஓவியம், சிற்பம் போன்ற துறைகளிலும் வங்காளிகள் மிகக் கீர்த்தி யடைந்திருக்கின்றனர். டாகூர் வமிசத்தில் அபானீந்திரநாத் டாகூரும், கஜேனேந்திரநாத் டாகூரும் ஓவியத்தில் மிகச் சிறந்து விளங்குகின்றனர். தான் சுயமாக ஓவியத்தில் சில கொள்கைகளைக் கைக்கொண்டு எல்லாருக்கும் பார்த்தமாத்திரத்தில் இன்பத்தையும் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடிய பாவத்தில் சித்திரம் எழுதுவர். அவர்களுக்குச் சிஷ்யர்களும் அநேகர் உண்டு. நந்தலால் போஸ் என்பவரும், சமரேந்திரநாத் குப்தா என்பவரும் முக்கியமானவர்கள். சமீபத்தில் டாக்டர் கஸின்ஸ் துரையவர்களால் நம்மிந்தியச் சமூகத்திற்கே அறிமுகமாக்கப்பட்ட பிரேபத குமார சாட்டர்ஜியும் ஒரு வங்காளிதான். அவர் தற்காலத்தில் மசூலிபிலுள்ள ஆந்திர ஜாதீய கலாசாலையில் மாணவர்களுக்கு ஓவியம் கற்பித்து வருகிறார். அவரது ஓவியத்தின் சிறப்பைப்பற்றி மிகவும் சிலாகித்துக் கூறுகின்றனர்.

தத்துவ விசாரத்தில் பிரசித்தி பெற்று விளங்குபவர்களில் முதன்மையானவர் ஸ்ரீமான் அரவிந்தகோஷ் என்பவர். இவர் பகவத் கீதைக்கு மிகவும் அரியதொரு பாஷ்யம் ஆங்கிலத்திலெழுதி யிருக்கிறார். இவருடைய நூல்கள்



தமிழ்நாடு ஆவணக் காப்பக

யாவும் பல ஐரோப்பிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன என்றால் அவற்றின் மேன்மை இத்தன்மையதென விளங்கும்.

கடைசியாக பௌதிக ரசாயன சாஸ்திரங்களை எடுத்துக் கொண்டு யோசித்துப் பார்ப்பின், இத்துறையிலும் வங்காளிகளேதான் மேன்மைபெற்று விளங்குகின்றனர். வெகுகாலமாக மேனாட்டார் இந்தியரின் மனப்பான்மையைப்பற்றி ஒரு கெட்டபிப்பிராயம் கொண்டிருந்தனர். அது என்னவெனின் இந்தியர்களுக்குப் பௌதிக ரசாயன சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்து புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்கும் சாமர்த்தியம் கிடையாது என்பதே. இந்தத் தப்பெண்ணத்தை மாற்றினவர்கள் ஆசார்ய ஸர் பி.ஸி. ரேயும் ஸர் ஜகதீச சந்திர போஸும் ஆவார்கள். ரசாயன சாஸ்திரத்தில் தன்னை மிக்காரும் ஒப்பாரும் ஒருவருமிலர் என்று விளங்கும் ஸர் பி.ஸி. ரே என்பவர் ஒரு நைஷ்டிகப் பிரம்மசாரி. இவர் ரசாயன சாஸ்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவர். இவர் நம் நாட்டுச் சரக்குகளைக் கொண்டே சாயங்கள் படியச் செய்வது என்ற முறைகளடங்கிய ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார். அவையாவும் மிகவும் சுலபமானவை. அதிகச் செலவில்லாதவை. இவர் நயமிந்திய நாகரிகத்தின் ஒரு முக்கிய அம்சமான ஆடம்பரமின்மை என்ற குணத்தையே பூஷணமாகக் கொண்டு தன் வாழ்விலும் நடத்தையிலும் காரியத்திலும் அநுஷ்டித்து வருகிறார். மேலும் நம் நாட்டு முறைகளைக் கொண்டே அநேக பரிசோதனைகளை அதிகச் செலவில்லாமலும் விலைபெற்ற துணைக் கருவிகளின் உதவியில்லாமலும் செய்யும் விதத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்.

தாவர சாஸ்திர ஆராய்ச்சியில் மிகச் சிறந்து விளங்குபவர் ஸர் ஜகதீச சந்திர போஸ் என்பவர். அவர் பலவிதத்திலும் மேன்மை பெற்றவர். இதுவரையிலும் ஒருவருடைய புத்திக்கும் எட்டாத ஒரு விஷயத்தில் அதாவது தாவர வர்க்கத்தைச் சேர்ந்த புல் பூண்டு செடி கொடிகளின் வளர்ச்சியிலும், வாழ்விலும் தனது கவனத்தைச் செலுத்தி, அவைகளுக்கும் மனிதர்போல் தூக்கம், சோர்வு, திளர்ச்சி, கோபம், மயக்கம்போன்ற உணர்ச்சிகள் உண்டு என்று தானாகவே ஒரு தகரக் கடைக்காரனின் உதவியால் செய்த துணைக் கருவியைக் கொண்டு கண்டுபிடித்திருக்கிறார். மேலும் இது காலம்வரை இந்தியர்களில் ஒருவராவது பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியில் மேனாட்டார் புகழப்படும்படியான காரியத்தைச் செய்ததில்லை. அங்ஙனம் முதன்மையடைந்தவர் ஸர் போஸ் என்பதில் தடையில்லை ஸர் போஸ் நமது மூதாதையர்கள்போல் அதிகச் செலவில்லாமல் தானாகவே துணைக்கருவிகளைக் கண்டுபிடித்து உலகத்திற்கு மறுபடியும் இந்தியர்களின் புத்தி சூக்ஷ்மத்தைத் தெரிவித்தார். இந்த பெரும் காரியத்திற்கு எல்லா இந்தியர்களும் அவருக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

வங்காளம்மாத்திரம் ஏன் இவ்வாறு பல துறைகளிலும் பொலிந்து விளங்கவேண்டும்? செல்வம் பொருந்திய தமிழ் மக்கள் ஏன் இன்னும் தூங்கவேண்டும்? தமிழ் நாடு பல விதத்திலும் செழித்த நாடு; பொருட் செல்வம், புத்திச் செல்வம், குணச்செல்வம், தியாகச் செல்வம் நிறைந்த நாடு. நாம் கிணற்றுத்தவளையையொத்து பிறர் நாட்டு வளப்பத்தைக் கவனியாதிருப்பது இனி ஒருகாலும் ஒவ்வாது. இனி இது தகாது. நாம் நம் உறக்கம் நீக்கி, ஆண்மையுடன் தமிழ்த் தாயின் உத்தம புத்திரர்கள்போல் உழைக்கவேண்டும். அங்ஙனம் செய்யின் நமது தமிழ் நாடு செழிக்கும், தமிழ் ஒலி ஓங்கும், தமிழ் ஒளி வீசும், தமிழறிவு மலியும்.

"பெற்ற தாயும், பிறந்த நன்நாடும்,
நற்றவ வானிலும், னனிச் சிறந்தனவே."

சுபம்.

# இந்திய ஸ்திரீ ரத்னங்கள்.

(ஸ்ரீமான். சி. என். அனந்தசுப்பன்.)

(590-ம் பக்கத் தொடர்ச்சி:)

## தமயந்தி.

### காட்டிற்குச் செல்லல்.

உலகத்தில் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வருவது இயற்கை. இந்த உண்மை நமது நாட்டில் வசித்து வந்த எண்ணிறந்த பதிவிரதைகளின் சரித்திரங்களாலும் பெரிய அரசர்களது சரித்திரங்களாலும் அறிகிறோம். நளனும் தமயந்தியும் கூடி இன்புற்று வரும் நாளில் சனி பகவான் தான் நளன்மீது கொண்டிருந்த பொறாமையைத்தீர்த்துக்கொள்ளும்பொருட்டு, புஷ்கரனை ஏவி நளனோடு சூதாடும்படிச் செய்து நளனுக்குக் கஷ்டத்தை உண்டாக்கினான். சூதாட்டத்தில் நளன் எல்லாவற்றையும இழந்தான். கடைசியில் தமயந்தியைக் கூட்டிக்கொண்டு காடேகினான். சூதாட்டம் மிகவும் கொடிது என்பதை நிரூபிக்க இந்த திருஷ்டாந்தம் போதும். சூதாடி யார் கெடாமல் இருந்திருக்கிறார்கள்? ஒரு பெரிய சக்ரவர்த்தியினுடைய நிலைமையே இவ்வாறு ஆகுமானால் மற்றப்படி சாமானியமானவர்களைபபற்றி என்னென்று கூறுவது? நளன் இந்தக் கேவலமான நிலைமையை அடைந்தான் என்றாலும் தமயந்தியின் பக்தியானது குறையவில்லை. கணவனுக்குத்தீங்கு ஏதாவதுநேரிட்டால உண்மையான மனைவியின கடமை கணவன் பக்கத்தில் இருந்துகொண்டு தைரியம் சொல்லுதலே ஆகும். கணவனுக்கு ஆபத்து நேருங்காலத்தில் அவனை விட்டுவிட்டுப் பிறந்த வீட்டிற்குச் சென்று விடுவது ஞாயமல்ல; இந்திய ஸ்திரீகளுக்கு அது அழகும் அல்ல. கணவனுடைய உயிருக்கு ஹானி ஏற்படும என்று தெரிந்தால் தங்களது உயிரைக் கொடுத்துக்கணவ[...]
ரைக் காப்பாற்றிய ஸ்திரீ ரத்னங்[...]
வளவு பேர் நமது நாட்டில் பிறந்திரு[...]
அப்பேர்க்கொத்த உத்தமிகளை ஈன்ற [...]
நாட்டின் புகழை எடுத்துரைத்தல் [...]
மோ!

இவ்வாறு நளனும் தமயந்தியும் [...]
சென்றுகொண்டிருக்கும்பொழுது ந[...]
களைப் பிடிக்கப் போகும் சமயத்தில்
அணிந்திருந்த ஒரு வஸ்திரத்தையும்
நேரிட்டது. காட்டில் பட்ட கஷ்டங்க[...]
ளவவ்வளவல்ல. தான் படும் துன[...]
அதிகம் கவனிக்கானில்லை. தன்னுடை[...]
வியாகிய தமயந்தி படும் துயரத்தையும்
டத்தையும் பார்த்துச் சகிக்காதவனாய்
"என் ஆருயிர்க் காதலி! நான் கஷ்டப்ப[...]
தான் சரி: நான் செய்த அடாத [...]
களுக்காக இத்தண்டனை எனக்கு [...]
ஞாயந்தான். ஆனால் அந்தோ!
என்னை நீ மணந்ததின காரணமா[...]
டில் நீயும் எவ்வளவு கஷ்டப்பட[...]
கிறது பார்? நீ படும கஷ்டத்தை
என மனம ஆற்றமுடியாததை[...]
ஆகையால் நான சொல்வது[...]
செய். நான் காட்டும்படி[...]
கொண்டு நீ விதர்ப்ப தேச[...]
தந்தை இருக்கிறார். இங்[...]
டாம்" என்றான்.

தமயந்தி:— (கண்களில் [...]
நாதா! நான் என[...]
தங்களுடையகோ[...]
எனது உள்ளத்[...]